# தமிழ் இலக்கியங்களில் சில புதிய பார்வைகள்

முனைவர்
இரா. செல்வக்கணபதி

அகமும் புறமும்



www.saivamonline.com

# Contact Details

www.saivamonline.com



www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online

sspathipagam@gmail.com

G Pay +91 94440 21113

+91 94440 21113

UPI 9444021113@UPI

# 2. அகமும் புறமும்

சங்க இலக்கியப் பயிற்சி முற்றாக இன்று அருகிப் போய்விட்டது. சங்க நூல்கள் எளிதில் பொருள் விளங்கும் தன்மை உடையன அன்று. ஆனாலும், முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. சங்க இலக்கியங்களுக்கு இன்று தமிழ்நாட்டில் மேடை இல்லை. சங்க நூல் கற்றுப் பேச வல்லாரும் சிலரே. பேசினும் உள்வாங்கிக் கொள்ளும் நிலையில் தமிழர்கள் இல்லை. அப்படி என்றால் அந்த உன்னதப் பதிவுகள் என்னாவது? ஒன்றிரண்டையாவது எம் தமிழ் மக்களுக்கு அடையாளப்படுத்த வேண்டும் என்று தோன்றிற்று. அழகுணர்ச்சி மிக்க அகப்பாடல் ஒன்றையும், சமூக நலம் பேணும் புறப்பாடல் ஒன்றையும் மாறிமாறி எளிமைப்படுத்தி எழுதலானேன். மாங்கனியின்ஒரு சிறு துண்டினைச் சுவைத்தார், மாங்கனியைக் கூடையாக வாங்குவதுண்டு. அந்த ஆசையில், எல்லாருக்கும் புரியுமாறு அகப்பாடலும் புறப்பாடலும் அணிவகுத்து வருகின்றன. படித்துப் பாருங்கள்; பிடித்துப் போகும். நீங்களும் ஒருநாள் சங்கச் சான்றோராகலாம். யார் கண்டது?

---

*சங்க இலக்கியங்களின் வெற்றிக்குக் காரணம் - அவை மனிதனை மையப்படுத்தி மானுடத்தைப் பாடின. கவிதையின் பாடு பொருள்களுள் மனிதத்துக்கு மேலானது ஒன்றுமில்லை, காரணம் கவிதை மனிதனுக்கானது.*

---



www.saivamonline.com

## நீரும் நிலனும்

கவிதைகளின் வெற்றியும் வாழ்நாளும் அவற்றின் பாடு பொருள்களிலேயே உள்ளன. சங்க இலக்கியங்களின் வெற்றிக்குக் காரணம் - அவை மனிதனை மையப்படுத்தி மானுடத்தைப் பாடின. கவிதையின் பாடு பொருள்களுள் மனிதத்துக்கு மேலானது ஒன்றுமில்லை, காரணம் கவிதை மனிதனுக்கானது.

பின் வந்த உரைகாரர்கள் சங்க நூல் பாடியவர்களைப் புலவர் என்று குறித்திலர்; சான்றோர் என்றனர். கவிதைகளின் பண்பு நலன்கள் கூட ஒரு காரணமாக இருந்திருக்கிறது. மன்னனைப் புலவன் பாடியன சங்கப் புறப்பாடல்கள். ஒரே மன்னனைப் புலவன், இரண்டு பாடல்கள் பாடியிருந்தால், பாட்டிற்குக் குறிப்பு வரைந்தவன் அவனை அவர் பாடியது என்று எழுதுவான்.

*தமிழ்க் கவிதைகளில் சங்க காலத்திற்குப் பின் காணாமல் தொலைந்த மனிதன், சேக்கிழாரின் பெரிய புராணத்தில் கடவுளோடு கைகோர்த்துக் கொண்டு வெளிப்பட்டான். மறுபடியும் காணாமல் போன அவன் பாரதியில் உயிர்த்தெழுந்தான்.*

மன்னர் - அவனாம், புலவன் "அவராம்". வள்ளுவன் கூட ஒழுக்கமுடையார் வாய்ச் சொல் என்று ஒரு தொடர் ஆண்டிருப்பதாக நினைவு. தமிழ்க் கவிதைகளில் சங்க காலத்திற்குப் பின் காணாமல் தொலைந்த மனிதன், சேக்கிழாரின் பெரிய புராணத்தில் கடவுளோடு கைகோர்த்துக் கொண்டு வெளிப்பட்டான். மறுபடியும் காணாமல் போன அவன் பாரதியில் உயிர்த்தெழுந்தான். பாரதியின் வெற்றிக்கு மூல, முழு முதற்காரணம் அவன் மனிதனை மையப்படுத்தியது தான்.

சங்கப் புலவர்கள் வறுமையில் பாடினர். அந்த வறுமை கூட அழகிய கவிதைகள் உருவாகத் துணைநின்றது. அவர்கள் ஆட்சியாளர்களைப் புகழ்ந்ததுண்டு. ஆனால், அடி பணிந்து வாழ்ந்தனர் அல்லர். பசியைப் பசப்பு வார்த்தைகளோடு சமரசம் செய்து கொண்டு வாழ அவர்கள் விரும்பியிருக்கவில்லை. மன்னனுக்கு அறிவுரை சொன்னார்கள். அவை மனிதகுலத்திற்கே பொதுவாய் விரிந்தன. எதுகை மோனைகளுக்காக அவர்கள் ஏங்கிநின்றதில்லை. கருத்தோட்டத்தில் தன்னியல்பாய் அவை இணைந்து கொண்டன.



www.saivamonline.com

மனிதத்தை வாழ வைக்க வேண்டுமென்றகரிசனம் அவர்களிடமிருந்தது. கடவுளர் மனித ஆற்றல்களுக்கு உவமை கூறமட்டுமே பயன்பட்டனர். பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடிய பாட்டொன்று என் கருத்தில் நின்றது. அரசே! உனக்கு விண்ணுலகம் ஆளும் அரச செல்வம் வேண்டுமா? இவ்வுலகம் உள்ள அளவும் நின் புகழை நிறுத்த எண்ண முண்டா? வழி சொல்வேன் கேள்!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் தமிழ்க் கவிஞர்கள் உள்ளத்தில் குடி கொண்டிருந்த சமூக நலம் பற்றிய நல்லெண்ணம் நம்மைச் சிலிர்க்க வைக்கின்றது. கோயில்களைக் கட்டிய நம் முன்னோர். அருகிலேயே குளங்களை நாட்டினர். பல கோயில்களைச் சூழ அகழிகள் வெட்டப்பட்டன. பெரிய, எடை மிகுந்த கோபுரங்கள் சிதைவுறாதிருக்க நிலத்தடி நீரைப் பராமரிக்க வேண்டுமென்று அவர்கள் உணர்ந்திருந்தனர்.

*இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் தமிழ்க் கவிஞர்கள் உள்ளத்தில் குடி கொண்டிருந்த சமூக நலம் பற்றிய நல்லெண்ணம் நம்மைச் சிலிர்க்க வைக்கின்றது.*

கடற்கரைகளிலும், ஆற்றோரங்களிலும் நகர நாகரிகம் செழித்ததும் இதனால்தான். ஒரு குளத்தைத் தூர் வாருவதற்காக ஒரு போராட்டமே நடத்திய கண்பார்வையற்ற தண்டியடிகள் என்பாரைச் சேக்கிழார் பதிவு செய்கிறார். முதலாம் இராசேந்திரன், புதிதாக அமைத்த கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழ சங்கம் என்ற மாபெரும் ஏரி ஒன்றை வெட்டியது வரலாற்றில் வாழ்கிறது. குளங்களைத் தூர்த்து வீடு கட்டும் புதிய கலாச்சாரக்காலத்தில் இத்தகு சங்கப் பாடல்கள் நம் கண் திறக்க உதவினால் மகிழலாம். மனித உடம்பு நீரான் இயன்றது. நீர் இன்றி உடல் வாழ்தல் இல்லை. உடம்பின் வாழ்வு உணவால் அமைந்தது. உடல் வாழ உணவு தருவோர், உயிர் கொடுத்தவர் ஆகின்றார். உணவு என்பது எது? புதிய விளக்கம் தருகிறார் குடபுலவியனார். உணவு என்பது நிலனும் - நீரும் சேர்தலே, ஒன்று புரிகிறது! உடம்போடு உயிர் சேர்ந்து வாழ வேண்டும் என்றால் நிலத்தோடு நீர் சேர்ந்தே ஆதல் வேண்டும்.

*எவன் ஒருவன் நிலத்தோடு நீரைச் சேர்த்து வைக்கிறானோ, அவன் உடம்போடு - உயிரைச் சேர்த்து வைத்தவன் ஆகின்றான்.*

எனவே, மன்னனே! எவன் ஒருவன் நிலத்தோடு நீரைச் சேர்த்து வைக்கிறானோ, அவன் உடம்போடு - உயிரைச் சேர்த்து வைத்தவன்



www.saivamonline.com

ஆகின்றான். விதைத்துவிட்டு வான் மழையை எதிர்நோக்கி நிற்கும் நிலப்பரப்பு எவ்வளவு பெரிதாக இருந்தாலும் அவை நின் வெற்றிக்கு அடித்தளம் ஆக மாட்டா? எனவே, இறைவனே! நின் நாட்டில் எங்கெங்கே குழிந்த நிலப் பகுதிகள் உள்ளனவோ, அங்கெல்லாம் நீரைக் கொண்டு சென்று நிரப்பு! குழிந்த நிலன்களில் நீரை நிரப்பியோர், அதாவது நிலத்தையும் - நீரையும் ஒன்று சேர்த்தவர்கள் இவ்வுலகில் உடலையும் - உயிரையும் ஒன்று சேர்த்தவர்கள் என்பதை அறிந்து கொள்! கவிதை நிறைகிறது. காவிரிக்குக் கரை கட்டி, கல்லணை எடுத்த கரிகாலன் போன்ற மாமனிதர்கள் நம் கண்ணில் நின்று, நன்றியால் கரைகின்றனர். மிகைச் சொல் கலவாது, ஒப்பனை செய்யாது உதித்த இத்தகு சங்கக் கவிதைகளைப் படைத்தோன் நடையில் படிக்கும் பரவசத்தை நீங்கள் பெறவேண்டாமா? முப்பது வரிகளும் தர மாட்டேன்! முத்தான சில வரிகள். "நீரின்றி அமையா யாக்கைக்கு எல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே" என்பதும்,

*உண்டி முதற்றே உணவின் பிண்டம்*
*உணவெனப் படுவது நிலத்தொடு நீரே*

என்பதும் மறக்க இயலாத சத்திய வாசகங்கள்.

*நிலனும் நீரும் புணரியோர் ஈண்டு*
*உடம்பும் உயிரும் படைத்திசி னோரே*

என்று எடுத்துரைத்துக் குடபுலவியனார்

*நிலம் நெறிமருங்கின் நீர் நிலை பெருக*

*தட்டோர் அம்ம! இவண் தட்டோரே!*
*தள்ளாதோர் இவண் தள்ளா தோரே!*

(புறநானூறு- பாடல் எண்:18)

என்று நிறைவிக்கிறார்.

நீர் ஆதாரத் துறையில் உலகப் பொறியாளர்களுள் ஒருவராகக் கருதத்தக்கவர் அறிஞர். வ.செ. குழந்தைசாமி. அவருக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன் நான் இக் கவிதையை விரித்துரைத்தேன்! அவர் சொன்னார் "நீர் ஆதாரம் குறித்த முதலும், முதன்மையுமான சிந்தனை இது தான்" என்று. ஒரு புறப்பாடல், ஒரு அகப்பாடல் என்ற அடுத்தடுத்துச் சங்கப் பலகையில் உங்களைச் சந்தித்துக் கொண்டேயிருப்பேன்.


www.saivamonline.com

## ஓ! இது இந்த மண்ணில்தானா?

மலரை விட மென்மையானது ஒன்று உண்டோ? உண்டு என்கிறார் திருவள்ளுவர். ஆம். அது தான் ஆண்-பெண் இடையே தோன்றும் காதல் என்னும் தெய்வீக உறவு. "மலரினும் மெல்லியது காமம்" சங்க காலத்தில் காமத்திற்குப் பொருள் காதல். இன்றோ காதலுக்குப் பொருள் காமமாக மாறிப் போயிற்று. காமம் மெல்லியது என்றால் அதனைக் கொண்டிலங்கும் பெண்மை எத்தகையது? பெண்மை மலர் போன்றது. அதன் பாதங்களுக்கு அனிச்சமலர் நோவு தரும். அன்னச் சிறகு முள்ளாய்க் குத்தும். இவையும் அந்தப் பாட்டன் சொன்னவைதாம்.

***சங்க காலத்தில் காமத்திற்குப் பொருள் காதல். இன்றோ காதலுக்குப் பொருள் காமமாக மாறிப் போயிற்று.***

காதல் புரிவோர்க்கும் தலையாய குணம் என்ன? "நாணம்" தான் என்கிறார் திருவள்ளுவர். "நாணும்" அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் என்று ஆத்திரப்படுகிறாரே அமரகவி! அது பெண்மையை அடிமைப்படுத்த நினைப்பாருக்குக் கொடுத்த சாட்டையடி. அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப என்கிறது தொல்காப்பியம். நாணம் என்றால் என்ன? பெண்மைக்கு இயல்பாயதோர் குணவிசேடம் என்றனர் உரைகாரர்கள். மல்லிகைக்கு மணம் போல, மாங்கனிக்குச் சுவை போல நாணம் பெண்மையொடு ஒட்டிப் பிறந்தது.

***மல்லிகைக்கு மணம் போல, மாங்கனிக்குச் சுவை போல நாணம் பெண்மையொடு ஒட்டிப் பிறந்தது.***

இன்றைய புரட்சிப் பெண்கள் என்று தம்மைக் கூறிக் கொள்வார் சிலர் பெண்மைக்கு இது வேண்டாம் என்கின்றனர். பெண்மையை அடிமைப்படுத்தும் சூழ்ச்சி என்று குமுறுகின்றனர். ஆணுக்கும் கூட நாணம் வேண்டும் என்று விதித்தனர் முன்னோர். அதனைப் பெருமை என்று குறித்தனர். தனக்கு ஒரு பழிபாவம் வந்து விடாது பரிகரித்து நாணும் ஆண்மைக்குணம் பெருமை. நாடாளும் அமைச்சருக்கும் கூட நாணம் வேண்டும் என்பதால் தான் நாணுடைமை வள்ளுவத்தின் பொருட்பாலிலும் இடம் பெறலாயிற்று. ஆண்மையொடு பிறந்தது வீரம். அது பெண்ணை ஈர்ப்பது. அது போல ஆணை வசிகரிக்கும் பெண்மைக்


www.saivamonline.com

குணம் நாணம். "உயிரினும் சிறந்தன்று நாணே" என்று அதன் உயர்ச்சி கூறுவார் தொல்காப்பியர்.

கடற்கரை சார்ந்த நெய்தல் நிலம் அது. சோலை சூழ்ந்த அந்த மாளிகைதான் காதலியின் வாழ்விடம். கட்டுக்காவல் மிக்கது. அவளோ செல்வ குடும்பத்து ஒரு மகள். அவள் வரவு காத்து - பூத்துப்போன காதலன், பகல் என்று பாராது காவலர் கண்களில் மண் தூவி எப்படியோ காதலி இல்ல வளாகத்துக்குள் நுழைந்து விடுகிறான். இனங்கண்டு கொள்கிறாள் தலை மகள். அவள் உயிர் என்னும் கோலில் ஒரு பக்கம் நாணம் தொங்குகிறது. இன்னொரு பக்கம் காமம் அழுத்துகின்றது.

நாணத்தை வென்ற காமம் பகல் என்றும் பாராது அவளைக் காதலன் வந்துள்ள சோலை நோக்கி நடக்க வைக்கிறது. அடர்ந்து செறிந்த சோலை நடுவே அழகிய ஒரு புன்னை மரம். அதை இன்று பின்னை என்று கூறுகின்றனர். கண்களில் காதல் பொங்கக் காதலன் நிற்பதைக் கண்டு பெண்மை நாணுகிறது. காமம் தோற்ற இடம் இது.

அருகில் நெருங்கிய காதலியை அணைக்க விரும்பிய காதலன் தன் இரு கைகளாலும் காதலியின் தோள்களைத் தொட நெருங்குகின்றான். தலைவி நாணத்தோடு அவனைத் தடுத்து நிறுத்துகிறாள். குறிப்பால் அவன் புருவ நெளிவுகள் காரணம் வினவுகின்றன. தலைமகள் இந்தப் புன்னை மரத்தின் நிழலில் - அதன் அருகில் நீங்கள் என்னொடு காதல் உரையாடுவதும், என்னைத் தொட நெருங்குவதும் எனக்கு நன்நாணம் தருகிறது. வாருங்கள் வேறு ஒரு மர நிழலில் சேர்வோம் என்று அழைக்கிறாள். ஏன்? எதற்காக? இந்த மர நிழலும் அழகுதாமே? ஏன் இவள் இந்த இடத்தைத் தவிர்க்கிறாள்? தலைவன் உள்ளத்தில் கேள்விகள் அலை அலையாய்ப் புறப்படுகின்றன.

தூரம் கடந்து தற்போது இருவரும் வேறு ஒரு மர நிழல் சேர்கின்றனர். தலைவன் கேட்கிறான். அந்தப் புன்னை மீது அப்படி என்ன வெறுப்பு உனக்கு? அதிர்ச்சி தரும் பதில் வருகிறது. அது என் தங்கை மரம். அஃறிணை அல்லவா? அது எப்படி உனக்குத் தங்கையாக முடியும்? இருவரும் வேறு ஒரு மர நிழலில் அமர்கின்றனர். தங்கை வந்த வரலாறு பேசுகிறாள் தலைவி.

பல ஆண்டுகளுக்கு முன் நான் சிறு மகளாக இருந்த காலம் அது. பரந்து கிடக்கும் எங்கள் சோலைவளாகத்தில் என் ஒத்த வயதுடைய தோழியரொடு நான் புன்னைக்காய்ப் புதைத்து மணல் விளையாட்டு ஆடி நின்றேன். திடீரென மழை! மண்ணில் புதைத்த புன்னை விதை ஒன்றை மறந்து மழைக்குத் தப்பி இல்லம் சேர்ந்தேன். பல நாள் கழித்து அன்னை


www.saivamonline.com

பராக்குக் காட்டி எனக்குச் சோறூட்டுகின்றபோது, புதிதாக ஒரு செடி முளைத்து வளர்ந்திருப்பதைக் கண்டு அதிசயித்தேன்.

இது ஏது? எப்படி வந்தது? என்று அன்னையை வினவினேன். அவள் என்னை உண்ண வைக்கப் புன்னைச் செடியைக் காட்டி இது உன் தங்கை என்றாள். நான் பாசத்தால் நெகிழ்ந்தேன். தங்கைக்கும் கொடு என்று அடம் பிடிக்கப் பாலும் சோறும் நாளும் புன்னைச் செடியின் வேர்களில் பெய்யப் பெற்றன. நானும் வளர்ந்தேன். புன்னையும் வளர்ந்தது. அது பூத்தது! நானும் தான்! இந்தச் சோலை வரும் போதெல்லாம் என் விரல்கள் இந்தப் புன்னைச் சகோதரியை மெல்ல வருடி மகிழும்.

***பெண்மையின் அறியாமை கலந்த உயிரன்பில் அவள் மடப்பம் பூத்து நிற்றலை உணர்ந்து நெகிழ்கிறான். அன்பு இரட்டிப்பாகிறது. அதன் பின் இன்பமும் இரட்டிப்பாதலைச் சொல்லவும் வேண்டுமோ?***

அஃறிணை உயர்திணை என்பதெல்லாம் அன்பின் முன் உண்டோ? இப்போது சொல், என் பாசம் மிக்க தங்கை அருகில் நீ என்னைத் தொட்டால்-காதல் மொழி பேசினால் எனக்கு நாணமாக அமையாதோ! அது தான்! அந்த மர நிழல் வேண்டாம் என்றேன்! தலைவன் கண்களில் மெல்லிய நீரோட்டம். பெண்மையின் அறியாமை கலந்த உயிரன்பில் அவள் மடப்பம் பூத்து நிற்றலை உணர்ந்து நெகிழ்கிறான். அன்பு இரட்டிப்பாகிறது. அதன் பின் இன்பமும் இரட்டிப்பாதலைச் சொல்லவும் வேண்டுமோ? நற்றிணையில் வரும் ஒரு நல மிகு அகப்பாட்டின் சாரம் இது! அன்று அன்னை என்ன சொன்னாள் தெரியுமா!

*"நும்மினும் சிறந்தது நுங்கை ஆகும் என்று*
*அன்னை கூறினாள் புன்னையது நலனே"*
*அம்மா! நாணுதும் நும்மொடு நகையே!*

பத்து வரிகளுக்குள் அமைந்த, பாடியவர் பெயர் தெரியாத ஒரு நனி நாகரிக நாண ஓவியம் இது. நற்றிணையின் 172 ஆவது காதல் பாடல் விளையாடு ஆயமொடு என்று தொடங்கும். துறைவிரித்தார் பல பட உரைத்தனர். நான் உணர்ந்து உரைத்தது இது. அயலவர் முன்னே காதலனுடன் நகையாட மயங்கிய நம் சங்க காலப் பெண்மை எங்கே? பத்து ஆணும் பத்துப் பெண்ணும் குத்தாட்டம் போட அவர் நடுவே பொது இடத்தில் கட்டிப் பிடித்துக் காதல் செய்யும் இக் காலக் கலைச் சித்திரிப்பு



www.saivamonline.com

எங்கே? எல்லாம் அதனதன் பெருமிதத்திலிருந்து தேய்ந்து மலினப்பட்டு வருவது உங்களுக்குப் புரிந்தால் சரி.

*பத்து ஆணும் பத்துப் பெண்ணும் குத்தாட்டம் போட அவர் நடுவே பொது இடத்தில் கட்டிப் பிடித்துக் காதல் செய்யும் இக் காலக் கலைச் சித்திரிப்பு எங்கே? எல்லாம் அதனதன் பெருமிதத்திலிருந்து தேய்ந்து மலினப்பட்டு வருவது உங்களுக்குப் புரிந்தால் சரி.*

## ஏன் இந்த உலகம் அழிந்து போகவில்லை?

தமிழ் மீது அடங்காத பற்று உடையவர்கள் போல் தம்மைக் காட்டிக் கொள்வதில் நம்மவர்கள் கெட்டிக்காரர்கள். கேட்டுப்பாருங்கள். "தமிழில் எல்லாம் இருக்கிறது என்பார்கள்." இல்லாததே இல்லை என்று சாதிப்பார்கள்.

நடிப்புச் சுதேசிகள்!

கிளிப்பிள்ளை மரபினர்!

தொல்காப்பியம் போல் ஒரு நூல் உண்டா?

அகமும்-புறமும் எம் இரு கண்கள்! காதலும், வீரமும் எம் உயிர்மூச்சு என்றெல்லாம் பெருமை பேசுவார்கள். இடுக்கண் வருங்கால் நகுக என்பார்கள். அடுத்த வரி கேட்டுப் பாருங்கள் விழிப்பார்கள். ஒன்றே குலம் ஒருவனே தேவனும் தெரிந்திருக்கும். யார் பாடியது? தெரிந்திருக்காது! தமிழனுக்குப் பத்துக் குறள்கள், நாலு சங்கப்பாடல்கள், இரண்டு நாலடியார், ஆத்திச்சூடியில் சிலவரிகள் தெரிந்திருக்க வேண்டாவா? நம் மொழிப்பற்று ஓர் ஏமாற்று வித்தை: பொய்மையான ஒரு போலி வேடம்.

*நாலு சங்கப்பாடல்கள், இரண்டு நாலடியார், ஆத்திச்சூடியில் சிலவரிகள் தெரிந்திருக்க வேண்டாவா? நம் மொழிப்பற்று ஓர் ஏமாற்று வித்தை: பொய்மையான ஒரு போலி வேடம்.*

தமிழன் மனப்பாடம் செய்து நெஞ்சில் நிறுத்த வேண்டிய ஒரு பாடலை வைக்கிறேன். தமிழினம் முயன்று பார்த்தால் மகிழலாம். இயற்கையே பொறுத்துக் கொள்ளாத எத்தனை எத்தனை அவலங்கள்! இமாலயத் தவறுகள், திசை மாறிய பயணங்கள், நாகரிகப் படுகொலைகள்!



www.saivamonline.com

உறவுச் சிதைவுகள்! இத்தனைக்கும் பிறகும் ஏன் இந்த உலகம் அழியாது நிற்கிறது? சரியான வினா! வள்ளுவர், இன்னும் சில பண்பாளர்கள் இந்த மண்ணில் வாழ்ந்து வருவதே காரணம் என்கிறார்.

பண்புடையார் பட்டுண்டு உலகம் என்பது அவர் மதிப்பீடு. அவர்களும் இல்லை என்றால் உலகம் என்றோ அழிந்தே போயிருக்கும். யார் அந்தப் பண்புடையார்? அன்னாரை எவ்வாறு இனங்காண்பது? முறையான ஐயம் தான்? ஒரு சங்கப் புறப்பாடல், குறள் தொடருக்கு விளக்கம் தந்து நிற்கிறது. தான், தன் பிள்ளை, தன்பெண்டு என்று சுருங்கிப் போய்விட்ட நம்மவர்களுக்குப் பாடல் சாட்டையடிகள் தந்து நிறைகிறது. சாவா மருந்து என ஒன்று உண்டு போலும். அமிழ்தம், அமிழ்தம் என்று அதனைக் கூறுகின்றனர். அந்த அமிழ்தம் தமக்குக் கிடைத்த போதும் அதனைத் தமக்குத் தாமே என்று வைத்துக் கொள்ளாது மற்றவர்களுக்கும் வழங்கிப் பகுத்துண்ணும் ஏமாளிகள் எவரும் உண்டா?

---

*ஆயிரத்திற்கும், ஐந்நூற்றிற்கும் கை நீட்டி விட்டுச் சிக்கிக் கொண்டதும் முகத்தை மூடி முக்காடு போட்டுக் கொள்ளும் முழு மூடர்கள் தாம் தினம் எத்தனை எத்தனை பேர்! இந்த அவமானத்தால் என் மனைவியும் பிள்ளைகளும் நொறுங்கிப் போய் விடுவார்களே என்ற அச்சம் அவர்களுக்கு இருந்திருக்க வேண்டாவா? மானங்கெட்ட மனிதர்கள்.*

---

ஊரையும், உலகத்தையும், உற்றாரையும், ஏன் தம்மைத் தாமேயும் வெறுத்துக் கொள்ளாத, எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா என்று மகிழ்வாரைச் சந்தித்த ஞாபகம் வருகிறதா? இருக்காதே! நம் செயல் கண்டு, பிறர் நாணும் போது, நமக்கு அது பற்றி நாணத் தெரியவில்லை என்றால் நாம் மனிதர்களாவது எப்படி? பிறர் அஞ்சும் துன்பங்களுக்கு நாமும் அஞ்சி, அவை தீரும் மட்டும் கண்ணுறங்காது காத்து நிற்கும் அன்பு நம்மிடம் உண்டா? தற்சோதனைக்காவது முயன்று பார்த்தோமா?

உலகோர் பழிக்கும் பழி மொழியை விலை கொடுத்து வாங்கும் மௌடீகம் நிலவும் நேரம் இது. உலகமே கிடைக்கும் என்ற நிலையிலும்-பழி வரும் எனத் தெரிந்தால்- அதனை வேண்டாம் என வெறுப்பாரை நம்மால் காண முடியவில்லையே! ஆயிரத்திற்கும், ஐந்நூற்றிற்கும் கை நீட்டி விட்டுச் சிக்கிக் கொண்டதும் முகத்தை மூடி



www.saivamonline.com

முக்காடு போட்டுக் கொள்ளும் முழு மூடர்கள் தாம் தினம் எத்தனை எத்தனை பேர்! இந்த அவமானத்தால் என் மனைவியும் பிள்ளைகளும் நொறுங்கிப் போய் விடுவார்களே என்ற அச்சம் அவர்களுக்கு இருந்திருக்க வேண்டாவா? மானங்கெட்ட மனிதர்கள். இவர்கள் எங்கே உயிர் கொடுத்துப் புகழ் வாங்கப் போகிறார்கள்? இடையறாது உழைக்கும் எண்ணம்- காலமும் பருவமும் பாராத முயற்சி இவற்றிற்கெல்லாம் உதாரணம் காட்டக்கூட பறவைகளையும் விலங்குகளையுமே தேட வேண்டியிருப்பது அவலமல்லவா?

மேற்குறித்த- பெருமைக்குரிய நற்பண்புகள் எல்லாவற்றையும்-நாம் பெற்றிருக்கிறோமா? தற்சோதனை செய்து கொள்ளவாவது நமக்கு விருப்பம் உண்டா? நமக்கும், நம் கண்களுக்கும், கருத்துக்கும் எட்டாது மனிதக் கூட்டத்துக்குள்ளே, தமக்கென வாழாது-பிறர்க்கென வாழும் சிலர் இன்னும் இருக்கத்தாம் இருக்கிறார்கள். அன்னாரைத்தாம் குறள் வரைந்தவர் பண்புடையார் என்றிருப்பாரோ? நமக்குத் தெரியவில்லை.

கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி, ஒரு பாண்டிய மன்னன். அவன் பாடுகின்றான். தமக்கென முயலாநோன்தாள் பிறர்க்கென முயலுநர் உண்மையான், உண்டாலம்ம இவ்வுலகம் என்று. பண்புடையார் பட்டுண்டு என்பதும் இதுவும் ஒன்றேதான்! தனக்கென வாழாது சமூக நலனுக்கென வாழும் சிலர் இன்னும் இங்கே வாழ்ந்து கொண்டிருப்பதால் தான் இந்த உலகம் அழியாது வாழ்ந்து கொண்டிருக்கிறது. பாடியவன் புலவன் அல்லன், மன்னன். ஆட்சியாளர்களிலும் யோக்கியமானவர் சிலர் வாழ்ந்திருக்கின்றனர் என்பது ஆறுதல். அவர்களை அடையாளம் காண முடியவில்லையே என்று கவலையா? புகை இருப்பதைக் கண்டு நெருப்பை ஊகித்துக் கொள்வதில்லையா? அது போலத்தான். ஒன்பதே வரிக்குள்-ஒரு புறப்பாடல்! காலத்தால் அழியாதது. மனப்பாடம் செய்து கொள்ளுங்கள்; பாடலை மட்டுமல்ல ; அது உரைக்கும் பண்புகளையும் தாம்!

உண்டாலம்ம இவ்வுலகம்... புறம் - 182

## தளரடி தாங்கிய சென்றது நெஞ்சம்

கார்த்திகையும் மார்கழியும் சந்திக்கப் போகும் ஒரு நாள். முன் இரவு. வானம் பொத்துக் கொண்டு விட்டதோ? மழை ஆசை தீரக் கொட்டிக் கொண்டிருக்கும் நேரம். வெட்டும் மின்னல் கீற்றுக்களின் ஒளிக் கோடுகளின் பேரழகுகூட அவளை எதுவும் செய்து விட முடியவில்லை.


www.saivamonline.com

நாகங்களைக் குலை நடுங்கவைக்கும் இடியோசை, அவள் செவி புகுந்ததற்கான அடையாளம் அவள் மேனியில் புலப்படவில்லை! என்ன ஆயிற்று அவளுக்கு?

"ஏன் பிரமை பிடித்தவள் போல் நிற்கிறாய்?" உயிர்த்தோழி உலுக்கி எடுத்த பிறகே தலைவி சுயநினைவுக்கு மீள்கிறாள்! எண்ணப் பறவை சிறகடித்து விண்ணில் பறந்ததோ? "என்ன நடந்தது? சொல்" எனத் தோழி மறிக்கிறாள்! தலைவி மவுனம் கலைக்கிறாள்! "என் நெஞ்சம் என்னிடம் இல்லை! அது மலையேறிப் போயிருக்கிறது!" நெஞ்சம் எப்படி மலை ஏறும்? ஏற வேண்டிய அவசியம் தான் என்ன? தோழியின் நெற்றிச் சுருக்கங்களுக்குத் தலைவி கட்டு விடுகிறாள். மெல்லிய சொற்கள் ஈரங்கலந்து வெளி வருகின்றன.

தோழி! ஊரம்பலத்தில் உட்கார்ந்து கொண்டு, வெட்டிக் கதை பேசுவார்களும் புறப்பட்டுப் போய் விட்டனர்! கொலை செய்யும் கூலிப்படையினரினும் கொடுமையான-பிரிந்திருக்கும் காதலரைக் காமத்தீயில் புரட்டி எடுக்கும் நள்ளிரவும் வந்து கொண்டிருக்கிறது! காமம், கடலிலும் பெருகி, என் மேனி முழுதும் பரவி நின்று என்னைக் கொல்லாமல் கொன்று கொண்டிருக்கிறது. நான் என் காதலனின் வருகைக்காகக் கவன்று கொண்டிருக்கும் நேரத்தில் என் நெஞ்சம் என்ற பகைவன், என்னிடமும் சொல்லிக் கொள்ளாமல், உன்னிடமும் ஒரு வார்த்தை உரைக்காமல், என் எல்லை கடந்து மலை ஏறிச் சென்று விட்டது? ஏன்? எதற்காக என்று புரிந்தும் புரியாது வினவுகிறாய் தோழி! அன்று, என்னைக் காட்டில் கண்டு மலையோரத்தில் இன்னுரை பேசிக் கூடிக் களித்தானே! அவனை, அந்த அன்பனை நாடித்தான் என் நெஞ்சம் ஓடியிருக்க வேண்டும். ஒரு நாள், ஒரு நாள் என அவனோடு உறவு வளர, என் மேனியில் மாற்றங்கள் மலர்ந்தன. அன்னைக்கு ஐயம் பிறந்தது. காரணம் கேட்ட போது ஒன்றுமில்லை என்று நான் சாதித்துவிட்டேன்.

தாய் என்னை வீட்டோடு முடக்கித் தடா விதித்துவிட்டாள்! அவன் நினைவால் நான் நொந்து நூலானேன்! நேற்றிரவு! கொட்டும் மழை! நம் வீட்டு அருகே! கொல்லைப் புறத்தில் எழுந்த புத்தோசை என்னைச் சிலிர்க்க வைத்தது. அன்னைக்குத் தெரியாது அடி மேல் அடி வைத்து அங்கே சென்றேன். என்ன வியப்பு? என் தலைவன், என் உயிரினும் மேலான காதலன்! சுனையில் பூத்த குவளை மலர்களைச் சூடிக் கொண்டு மழையில் நனைந்த யானையாக நின்று புன்னகை பூத்தான்!



www.saivamonline.com

அவனைக் கண்டு துடித்த நெஞ்சம் பரவசத்தில் படபடத்தது! அன்னை அறிந்து விட்டால் என்ற அச்சம் அடிமனத்தில் தீப்பந்தமாய்ச் சுழன்றது. அருகில் வந்தான்; ஆரத்தழுவினான்! அச்சப்பாயலில் நாங்கள் ஆருயிர் கலந்தோம். நாளை இரவும் வரலாம் அல்லவா? அவன் வினா நெஞ்சில் தேன் மழையாய்ப் பாய்ந்தது. வாருங்கள் என்று கூற உணர்வு துடித்தது! வரும் பாதை பற்றிய அச்சத்தை அறிவு பேசியது. பெய்தும் கெடுக்கும்! பெய்யாமலும் அழிக்கும் இந்த மழையாகிய பாவி, நாளை இல்லாதிருந்தால், வாருங்கள் என்றேன்! மழை இருக்க கூடாது என்று உள்மனம் பிரார்த்தனை வைத்தது! அவன் போனான்! என் ஆவியும் அவனுள் கலந்து போனது!

தோழி! வரும் வழியில் அவனுக்கு ஒன்று ஆகிவிட்டால் நான் ஒரு நொடியும் வாழமாட்டேன்! அவன் வரும் பாதை எனக்கு நன்றாகத் தெரியும். யானை மீது ஒரு கயிற்றில் இரண்டு மணிகளைக் கட்டி இருபக்கமும் தொங்கவிடுவார்களே, பார்த்திருக்கிறாய் அல்லவா?

ஆமாம்! பார்த்திருக்கிறேன். அதற்கு என்ன?

யானை ஆடி ஆடி நடக்கக் கயிறு உராய்ந்து, யானையின் கறுத்த உடலில், கயிறு, ஒரு சுவடு ஏற்படுத்தி இருக்கும் அல்லவா?

ஆம்! ஆம்! அவ்வழியில் தானே நாம் நடந்து, தலைவனை முதன் முதலாகச் சந்தித்தோம். நன்றாக நினைவிருக்கிறது.

அந்த ஒற்றையடிப் பாதையில் ஆங்காங்கே, குண்டும், குழிகளும் நிறைந்திருக்கும் அல்லவா?

ஆம்! அதற்கென்ன?

ஒரு வேளை! இன்றும், இந்தக் கொட்டும் மழையில், என் காதலன் என்னைக் காண அந்த வழியில் வந்து கொண்டிருப்பனோ?

இருக்கட்டுமே! நல்லது தானே!

போடி! பயித்தியமே! பெய்யும் இந்தப் பெருமழையில் ஒற்றையடிப் பாதையில், குண்டு குழிகளில் எல்லாம் நீர் நிரம்பியிருக்குமே!

எது பாதை? எது குழி என்று அறியாது இந்த இருளில் அவன் அறியாது கால்மிதித்து விட்டால்?



www.saivamonline.com

அதற்கு நாம் என்ன செய்யமுடியும்?

ஏன் முடியாது! அப்படி என் தலைவன், இருளில் தடம் அறியாது. மழை நீர் நிறைந்திருக்கும் குழி ஒன்றில் கால் எடுத்து வைத்தால் தடுமாறி விடுவான் அல்லவா? அவ்வாறு அவன் தடுமாறி விழுந்து விடாமல் பாதுகாக்கவே, அவன் அடிகள் தளரும் போது அவற்றைத் தாங்கிப் பிடிக்கவே என் நெஞ்சம் என்னை விட்டு அங்கே சென்றிருக்கிறது!

தோழி கண்கள் குளமாயின! தலைவியின் மழை ஈரத்திலும் மேம்பட்ட அன்பில் பொசியும் கழிவிரக்கம் நம்மை நெகிழ்விக்கிறது! இதில், மேலும் ஒரு சுகம் இருக்கிறது!

முன்னரே வந்து தலைவி வருகைக்காக மறைந்து நின்று காத்திருந்த தலைவன், தலைவி, தோழி உரையாடல் கேட்டு, நைந்து போனான். வியக்க வைக்கும் இன்னும் ஓர் உண்மையை உங்களுக்குச் சொல்லப் போகிறேன்! தலைமகனுக்கு ஒன்று என்றால், தான் உயிர் வாழ்தல் இல்லை என்ற அளப்பரிய அன்பில், காமம் புதைந்து அவன் வாழ்வில் மகிழும் அன்புள்ளம் இவ்வாறான இரவுகளில் அவன் வர வேண்டாம் என்பதை அவனுக்கு உணர்த்துவதற்காகவே அவள் பேசினாள்.

அப்படி என்றால். அவன் வந்திருக்கிறான் என்பதை அறிந்தே அவன் கேட்க இந்த உரையாடல் நாடகம் அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

***இட்டருங் கண்ணபடுகுழி இயலின்***
***இருளிடை மதிப்புழி நோக்கி அவர்***
***தளரடி தாங்கிய சென்றது இன்றே.***

கபிலர், அகநானூறு- 128

## ஏட்டில் உள்ளன, இதயத்தில் இல்லையே!

ஆதவன் சற்றே வடபக்கமாகச் சாய்ந்து பயணிக்கும் உத்தராயணத்தின் அடையாளம் போலத் "தை" பிறந்தது. தாயர் அருகில் நிற்க, இளமகளிர் நீராடும் நீராட்டைத் "தை நீராடல்" என்கிறது பரிபாடல். பாரிக்கு உரிய பரம்பு மலைச் சுனைகளில் தங்கியிருக்கும் நீரின் தண்மையைத் தைத்திங்கள் தண்ணிய என்று குறுந்தொகை சுட்டுகிறது. தைப்பூசம் காணாது போதியா என்று திருஞானசம்பந்தர் பண்டைச் சமய விழா ஒன்றைச் சுட்டிப் பேசுகிறார். பனி நிறைந்த காலத்தில் கூரை மீது வைக்கோல் பாவிய வீடுகளில் வாழ்தல் பாதுகாப்பானது என்பதைத் தமிழ் அன்னை ஔவை, தையும் மாசியும் வையகத்து உறங்கு என்கிறார்.



www.saivamonline.com

நரை, விரைந்து தோன்றாது வாழும் வாழ்க்கைக் கலைக்குக் கவலை இன்மை தேவை என்பதை வற்புறுத்தியவர் தண்தமிழ்ச் சான்றோர் பிசிராந்தையார். நட்பியலில் பிரித்துப் பார்க்க இயலாத அத்தியாயம், அவர் நாடாளும் கோப்பெருஞ்சோழனோடு கொண்டிருந்த கேண்மை. வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும் என்ற பாராட்டு மொழிகளுக்கு உரியவன் பாண்டியன் அறிவுடைநம்பி. மழலைகள் தரும் இன்பத்தை அவனைப் போல் அனுபவித்துப் பாடிய கவிஞர் எவரும் இலர். (188)

*ஒரு காலத்தில் நாடாளுவோரினும் மேலாகக் கல்வியாளர்கள் இந்த மண்ணில் மதிக்கப்பட்டிருந்தனர். 'அவனை அவர் பாடியது' என்பது புறநானூற்றுத் தொகுப்பில் பதிவாகியுள்ளது.*

ஒரு தைத்திங்கள் தண்ணிய புலர்காலை. யானை கட்டிப் போரடிக்கும் பாண்டி நாட்டு வயல்வெளி வரப்பு ஒன்றில், அவன் முன்நடக்க அவர் பின்னே செல்கிறார். அவன் என்றது பாண்டியன் அறிவுடை நம்பி; அவர் என்றது பிசிராந்தையார். ஒரு காலத்தில் நாடாளுவோரினும் மேலாகக் கல்வியாளர்கள் இந்த மண்ணில் மதிக்கப்பட்டிருந்தனர். அவனை அவர் பாடியது என்பது புறநானூற்றுத் தொகுப்பில் பதிவாகியுள்ளது. முதல் நாள் இரவு உழவர்கள் பிசிராந்தையாரைச் சந்தித்திருக்க வேண்டும். ஆறில் ஒன்றுக்கு மேலாக, மன்னன் பெயர் கூறி, பாண்டியன் பரிசனத்தார், நிலவரி கேட்டு நெருக்கி இருக்க வேண்டும்.

அதனால் தான், நாடாள்வோர் காட்சிக்கு எளியராக வாழ்தல் வேண்டும் என்கிறார் நம் பாட்டனார் வள்ளுவர். ஒரு பக்கத்தில் அறுவடை நடந்து கொண்டிருக்கிறது. களத்து மேட்டில் நிறைந்திருந்த யானைகள், பாகர்களின் கட்டளையை மீறி விளைவயலில் இறங்கிச் செந்நெற்கதிர்களை மேயத் தொடங்கின. பாகர்களோடு இணைந்து உழவர்களும் யானைகளை வயலிலிருந்து வெளியேற்றும் முயற்சியைக் கண்ட பாண்டியன், விடுங்கள்; அவை மேய்ந்து விட்டுப் போகட்டும், என்று ஆணையிட்டான். பாகர்கள் செயலறியாது ஆணைக்கு அடங்கினர்.

பிசிராந்தையார், அப்போது குறுக்கிடவில்லை. இருவரும் சாலை நோக்கி நடந்த நேரம். தருணம் பார்த்திருந்த புலவர், மன்னா! நீ அப்படி ஓர் ஆணை பிறப்பித்திருக்க வேண்டாமே என்றார். எதைச் சொல்கிறீர்கள்? சொல்கிறேன் என்றார். தேர் வந்து நின்றது. உரையாடல்



www.saivamonline.com

தொடரவில்லை. இருவரும் அரண்மனை சேர்ந்தனர். இறங்கி நடந்தனர். வாயில் அருகில், யானைகள் கட்டியிருக்கும் கூடங்கள். இருவரும் சற்றே நின்றனர். யானை மேய்க்கும் பாகர்கள், பெரிய பெரிய பாத்திரங்களில், சோற்றுத் திரளைகளைக் கைகளால் உருட்டி உருட்டி யானை வாயில் ஊட்டிக் கொண்டிருந்தனர். உரையாடல் தொடர இதுவல்லவா தருணம். அங்கே, யானைகள், தாமே வயலில் இறங்கிக் கதிர்களை மேய்ந்தன. இங்கே பாகர்கள் ஊட்டி விடுகின்றனர்.

அவை அவற்றிற்கான உணவை, தாமே தேடி உண்பதில் தானே மகிழ்கின்றன. அதன் உரிமையில் நாம் ஏன் குறுக்கிடவேண்டும்? வேலி என்பது விளைவயல் அளவுகளுள் ஒன்று. 20 மா கொண்டது ஒரு வேலி என்பது சோழ நாட்டு வழக்கு. கட்டுக் கலங்காணும், கதிர் உழக்கு நெல்காணும் என்பது ஒரு வளமான பழமொழி. யானைகள் தாமே இறங்கி, வயலில் நெற்கதிர்களை மேய்ந்த போது, அவற்றின் வாயில் புகுந்த கதிர்கள் ஒன்று என்றால், காலில் மிதிப்பட்டு அழிந்தன பத்து. மன்னா! அவற்றையே அறுத்துப் போரடித்து, குற்றி, அரிசியாக்கி, வடித்து, சோற்றுத்திரள்களாக உருட்டி வழங்கினால் ஒரு மாநிலத்தில் விளைந்த நெல், அவற்றுக்குப் பல நாள்களுக்கு உணவாகுமே. உண்மைதாம் என்றான் அறிவுடைநம்பி. ஆட்சியாளர்களுக்குச் செவி கைப்பச் சொற் பொறுக்கும் பண்பு வேண்டுமே. அது அவனிடம் இருந்தது! என்ன சொல்ல வருகிறீர்கள். சுலபம் என்றார் பிசிராந்தையார்.

---

***ஆட்சியாளர்கள் நெறியறிந்து வரிகேட்டால், மக்கள் முறையாக வழங்கித் தாமும் எஞ்சியன கொண்டு மகிழ்ந்து வாழ்வர். அன்பின்றித் தன் பெயருக்குக் களங்கம் சூழ்வாரை நியமித்தால் யானை புகுத்த வயல் போல, மன்னனும் வீழ்வான். அவன் மாநிலமும் சிதையும்.***

---

தடி எடுத்தவன் தணடல்காரன் என்பது ஒரு அனுபவமொழி. நின் பெயர் கூறி மக்களைப் பிழிந்து, நின் கட்டளைகளுக்கு மிகுதியாக, நின் குடை நிழல் வாழ்வாரிடம் நிலவரி வசூலிக்கப்படுவது என் கவனத்திற்கு வந்தது. யானை, நியமிப்பார் இல்லாது, தறிகெட்டுத் தானே விளை வயலை மேயத் தொடங்கினால், அதன் வாய் புகுவதினும் மேலாகக் கால்பட்டுச் சிதைவதே அதிகமாகும்.

அதே வயலில் விளைந்திருப்பதை, முறைப்படி அறுத்து, உணவாக்கி வழங்கினால், யானைக்குப் பன்னாள் உணவாகுமே!



www.saivamonline.com

புரிகிறதா? புரிகிறது என்றான் மன்னன். நமக்கும்கூட புரியத் தொடங்குகின்றது. ஆட்சியாளர்கள் நெறியறிந்து வரிகேட்டால், மக்கள் முறையாக வழங்கித் தாமும் எஞ்சியன கொண்டு மகிழ்ந்து வாழ்வர். அன்பின்றித் தன் பெயருக்குக் களங்கம் சூழ்வாரை நியமித்தால் யானை புகுத்த வயல் போல, மன்னனும் வீழ்வான். அவன் மாநிலமும் சிதையும். கள்ளப் பணமும், கறுப்பு பணமும், வரி ஏய்ப்பும் எப்படிப் பிறந்தன? ஆட்சியாளரின் அணுகுமுறையில் வந்த பிழை பாடுகள். எல்லாம் ஏட்டில் இருக்கின்றன. இதயங்களில் தாம் இல்லை. நெஞ்சு கனக்கிறது.

*அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே*
*கோடி யாத்து நாடுபெரிது நந்தும்*
*மெல்லியன் கிழவ னாகி வைகலும்*
*வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு*
*பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்*
*யானை புக்க புலம்போலத்*
*தானும் உண்ணான் உலகமும் கெடுமே*

- புறநானூறு

## நகைக் கூட்டம் செய்தான் அக்கள்வன் மகன்

காதல் எவ்வளவு அழகானதோ, அதே அளவு அச்சமும் நிறைந்தது. காதல் தொடங்கிய பெண் நெஞ்சில் இரண்டு பேய்கள் குடி புகும். ஒன்று மௌனம், மற்றொன்று பொய். அன்று தொட்டு இன்று வரை காதலர்களுக்குத் தமிழ்ச் சமுதாயம் வழங்கும் வேண்டாத வெகுமதிகள் இவை. மௌனம் உடைகிறநேரத்தில் காதல் வெற்றி பெறும். அச்சம் விடைபெறும் போது கவிதை மெருகேறும். இவை உடைபடும் தருணத்தைப் பொறுத்தே கவிதை அரியணை ஏறி முடிசூட்டிக் கொள்ளும். நேற்று நடந்த ஒன்றைநினைத்தால் தோழி என் நெஞ்சம் மீண்டும் பற்றிக் கொண்டு விடும். தலைவி மேனி நடுங்கச் சொற்கள் தவணை முறையில் உதிரலாயின. தோழி பதட்டமடைந்தாள், என்ன? என்ன நடந்தது? அந்தப் பயல், யாருக்கும் அடங்காத காளை, ஊர்மேயும் மாடு அவன் தான், யாரவன்?

தோழி அறியாது, தலைமகள் பூட்டி வைத்திருந்த காதலன், இன்றுதான் நெஞ்சிலிருந்து விடுதலையாகிறான். முன்பெல்லாம் மலையடிவாரத்து, அருவி கொழித்த மணலில் நாம் இருவரும் சிறு வீடு



www.saivamonline.com

கட்டி ஆடுவோமே நினைவிருக்கிறதா? நாம் அழ அழ, நாம் கட்டும் மணல் வீடுகளை ஒருநொடிக்குள் ஓடி வந்து கால்களால் எற்றிச் சிதைப்பானே ஒரு சிறு பட்டி! நினைவில்லை? நம் கூந்தல் மலரைப் பிய்த்தெறிந்து, விளையாடும் பந்தினைப் பற்றி ஓடி நம்மை அழ வைப்பானே! அவனை ஞாபகப்படுத்திப்பார்! தலைமகள் சுட்டிய அடையாள நிகழ்வுகள், தோழி மனத்தில் ஒரு சிறுமகன் உருவைக் கலைந்த ஓவியமாய் அள்ளித் தெளித்தன!

***காதல் தொடங்கிய பெண் நெஞ்சில் இரண்டு பேய்கள் குடி புகும். ஒன்று மௌனம், மற்றொன்று பொய்.***

***மௌனம் உடைகிறநேரத்தில் காதல் வெற்றி பெறும். அச்சம் விடைபெறும் போது கவிதை மெருகேறும். இவை உடைபடும் தருணத்தைப் பொறுத்தே கவிதை அரியணை ஏறி முடிசூட்டிக் கொள்ளும்.***

ஆழ்மனம் சுட்டுவிட அந்த உருவம் அவளுக்கு நன்றாகவே புலப்பட்டுவிட்டது. இன்னார் இல்லத்து இன்னார் மகன் அவன்தானே என்றாள் தோழி. அந்தப் பாவி மகன்தான்! பத்தாண்டுகளுக்கு முன் சிறு குறும்பு செய்தவன், அவளைச் சிந்தையில் சுமந்தே வளர்ந்து ஆளானான்! அன்று அச்சம் விளைத்தவன் இன்று அன்பை விதைத்தான். மணல் வீடு சிதைத்தவன் மனைவியாக்கத் துணிந்தான். பூப் பறித்தவன் மலர் சூடத் துடித்தான். பந்து கொண்டு ஓடியவன் தலைவி சென்றவிடமெல்லாம் வந்து கொண்டேயிருந்தான்.

தோழி அறியாது, காதல் கருக்கொண்டு வளர்ந்தது. தோழி, நேற்று நண்பகல்! என் தந்தையும், தமையனும் இல்லத்தில் இல்லாத நேரம். உளவறிந்து வருபவர்கள் கள்வர்கள் மட்டுமல்லர்; காதல்களும் கூடதாம். என் வளமனை முற்றத்தில் என் அன்னை அன்பு மிக, என் கூந்தலை நீவி விட்டுக் கொண்டிருந்த நேரம். மறைவிடத்தினும், மலை அடிவாரத்திலும் மட்டுமே சந்தித்துக் கொண்டிருந்த அவனுக்கு எது அந்தத் துணிவைத் தந்தது?

காதல்... அளப்பரிய அன்பு... பிரிவாற்ற இயலாத ஆண்மை! திடீரென்று என் இல்லத்து வாசலிலே வந்து நின்றான். அச்சம் என்னை விழுங்க, மேனி வியர்க்க... கண்கள் சாம்ப நான் குலைந்து கொண்டிருந்தேன். தன் மகன் ஒத்த ஓர் வீரனைக் கண்ட அன்னை, யாரப்பா? எங்கு வந்தாய்? என்ன வேண்டும் என்று வினாக்களை அடுக்கினாள். ஆவேசத்தில் பிறந்த, துணிவின்மேல் நின்றவனுக்கு,



www.saivamonline.com

அவளோடு அன்னையையும் கண்டபோது அச்சமும் சேர்ந்து கொண்டு விடுகிறது. உண்ண நீர் வேண்டும்... மகள் மேல் கொண்டிருந்த மாறாத நம்பிக்கையில் தாய் ஒன்று மறியதவளாய் மகளே! உள்ளே போய் ஒரு நல்ல பாத்திரத்தில் நீர் கொண்டு வந்து இவனுக்குக் கொடு என்று பணித்து விட்டு அடுக்களைக்குப் பயணமானாள்!

என்ன துணிச்சல்! பாவி! இல்லத்து வாயிலுக்கே வந்து தொலைத்தானே! தாகமாம்! தண்ணீராம்! நடுங்கிக் கொண்டு உள்ளே சென்றவளுக்கு... அவன் வருகை, ஊடே மகிழ்ச்சியையும் தரவே செய்தது. நீர் கொண்டு வந்து நீட்டுகிறாள்! அசட்டுத் துணிச்சலா? ஆண்மையின் பலமா? யாரும் அருகில் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டவன், நீர்க்குவளை வாங்குவான் போல் அவள் வளை முன் கையைப் பற்றுகிறான்!

---

***பத்தாண்டுகளுக்கு முன் சிறு குறும்பு செய்தவன், அவளைச் சிந்தையில் சுமந்தே வளர்ந்து ஆளானான்! அன்று அச்சம் விளைத்தவன் இன்று அன்பை விதைத்தான். மணல் வீடு சிதைத்தவன் மனைவியாக்கத் துணிந்தான். பூப் பறித்தவன் மலர் சூடத் துடித்தான். பந்து கொண்டு ஓடியவன் தலைவி சென்றவிடமெல்லாம் வந்து கொண்டேயிருந்தான்.***

---

அச்சமும் நாணமும் கொண்ட பெண்மை காதல் மறந்து ஐயோ! அம்மா! இவன் செயலைப் பார் என்று உரக்கக் கூவி விடுகிறது! உறைந்து போனவன், கையை விலக்கிக் கொண்டு தடுமாறிக் குற்ற உணர்ச்சியில் நிற்க, அன்னை பதட்டடத்துடன் அடுக்களையிலிருந்து முற்றத்துக்கு ஓடி வர, காதல் எல்லை கடந்த ஆண்மை, அச்சத்தில் சிதைந்த பெண்மை மீட்டுயிர் கொண்டு சிலிர்த்தெழுகிறது! கை பிடித்தான் என்றால் கதை முடிந்தது!

ஒரு நொடிக்குள் சூழ்நிலையைப் பெண்மை வெற்றி கொள்கிறது... ஒரு பொய்... வாய்மையாகி வாழ்வு தருகிறது.

அம்மா! இவன் நீர் பருகும் போது விக்கலெடுக்க நிலைகுலைந்தான். அது தான் என்றாள். தாயல்லவா? அருகில் வந்து அன்பொழுகத் தன் கைகளால் எதிர் நின்றதலைமகன் மார்பையும் முதுகையும் அவள் நீவி விட்டு, பார்த்துப் பருகலாகாதா என்று பரிவோடும் பேசலானாள்! காதலியின் அன்பில் நெகிழ்கிறான் தலைவன்! நன்றி உணர்ச்சி அவன் கண்களில் நிறைகிறது. இத்தகு பெண்மையின்



www.saivamonline.com

மன்னிப்பில் தானே ஆண்மை இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. வார்த்தைகளால் நன்றி சொல்லத் தாய் அருகில் நிற்கிறாள். நன்றியைக் கடைக் கண்ணில் தேக்கி ஒரு பார்வை பார்த்தான் போ! தோழி! என்ன சொல்ல!

*ஒவ்வொரு தருணத்திலும் தவறுகளிலும், நம்மவள் காட்டிய அன்பு கலந்த மறைப்பிலும், மன்னிப்பிலும் தாமே நம் வாழ்க்கைத் தேர் ஓடிக் கொண்டிருக்கிறது என்ற நன்றியுணர்ச்சி மேலோங்குகிறது. நாம் மனிதர்களாகிறோம்.*

முதல் முதல் அவன் மேனி தழுவிய போது ஏற்பட்ட பரவசத்தை இன்று அவன் கண்களே தந்தன. தோழிக்குக் காதல் வெளிப்படுத்தி-காதலனையும் அடையாளப்படுத்தும் அழகுணர்ச்சி மிக்க கலிப்பாட்டு நம்மை ஏக்கம் கொள்ள வைக்கிறது. நம் நினைவுகள் நீளப் பின்னோக்கிப் பயணிக்கின்றன. ஆம்! ஒவ்வொரு தருணத்திலும் தவறுகளிலும், நம்மவள் காட்டிய அன்பு கலந்த மறைப்பிலும், மன்னிப்பிலும் தாமே நம் வாழ்க்கைத் தேர் ஓடிக் கொண்டிருக்கிறது என்ற நன்றியுணர்ச்சி மேலோங்குகிறது. நாம் மனிதர்களாகிறோம்.

கலித்தொகை-குறிஞ்சி-கபிலர்-52

## நீயும் எல்லோர்க்கும் கொடுமதி

வறுமை தலைவிரித்தாடும் சமூகத்தில்தான், கொடைக்கும் ஈகைக்கும் வெண்சாமரை வீசப்படும். கற்றவர்கள்? வறுமையில் வாடினால் நல்ல கவிதைகள் பிறக்கும். சிலர் மட்டுமே செல்வர்களாக-பலர் வறுமையில் துவண்ட காலத்தில் பிறந்த கவிதைகளே புறநானூற்றில் முதல் வரிசையில் நிற்பன. புகழ் ஒரு போதை! கள்ளூறும் தமிழ்க் கவிதைகளால்-வறுமைச் சுவை நுகர்ந்த கவிஞர்கள், கொடுப்போரைப் போற்றி நின்றனர். அவை, இச்சகம் அன்று! இன்னும் கொடு என்ற மயக்குறுத்தல்.

*வறுமையில் வாடினால் நல்ல கவிதைகள் பிறக்கும். சிலர் மட்டுமே செல்வர்களாக-பலர் வறுமையில் துவண்ட காலத்தில் பிறந்த கவிதைகளே புறநானூற்றில் முதல் வரிசையில் நிற்பன.*



www.saivamonline.com

ஒரு செல்வன் வீட்டு வளங்கள் எல்லாம் இன்று முதல் எனக்குச் சொந்தமாகி விட்டன என்று ஒரு பரம ஏழை எக்காளமிட்டான்!

அது எப்படி? நண்பன் வினாத்தொடுத்தான். அவை எல்லாம் அந்தச் செல்வனுக்கல்லவா சொந்தம்? முட்டாளே! நீ சொல்வது போல் செல்வம் அவனுடையதாக இருக்குமானால் அவன் இரண்டு காரியங்கள் செய்திருக்க வேண்டும். ஒன்று தான் துய்த்து மகிழ்ந்திருக்க வேண்டும்? அல்லது பிறர்க்கு வழங்கி மகிழ்ந்திருக்க வேண்டும்? இரண்டும் மாட்டாது அவன், செல்வம் எனது எனது என்று கூறிக் கொண்டிருக்கிறான். நானும் அதைத்தான் கூறுகிறேன்? அவை எனது, என்னுடையன! அதை நான் துய்க்கவும் இல்லை! வழங்கவும் இல்லை. இது சமண முனிவர்கள் நாலடியாரில் முன்வைத்த தர்க்க வாதம். கொடுப்பது செல்வர்களுக்கே உரிய குணம் என்பர். கொடுப்பதும், கொடுத்து மகிழ்வதும் ஏழைகளின் குணம். ஈத்துவக்கும் இன்பம் என்பானே நம் பாட்டன்; ஆம்.

---

***கொடுப்பது செல்வர்களுக்கே உரிய குணம் என்பர். கொடுப்பதும், கொடுத்து மகிழ்வதும் ஏழைகளின் குணம். ஈத்துவக்கும் இன்பம் என்பானே நம் பாட்டன்;***

***சங்க நூல்களில், காதல் அழகு என்பர் சிலர். எனக்கென்னவோ வறுமைப் புனைவுகளே, புறத்தை வாழ்விக்க வல்லனவாகத் தோன்றுகின்றன.***

---

ஈதல் செல்வர் செயல். இன்பம், பெற்றுக் கொண்ட வறுமையாளன் உளத்துதிப்பது. இந்த இன்பம் ஏழைகளுக்கே எளிதில் புரிய வருவது. ஈதல் எளிதே என்பது கபிலர் வாக்கு. வறுமையின் எல்லை கண்டவர் பெருஞ்சித்திரனார். சங்க நூல்களில், காதல் அழகு என்பர் சிலர் எனக்கென்னவோ வறுமைப் புனைவுகளே, புறத்தை வாழ்விக்க வல்லனவாகத் தோன்றுகின்றன. வறுமையாளர்கள் எப்போதாவது பெருஞ்செல்வம் பெற்றால் என்ன செய்வர்? கேட்டுப்பாருங்கள். உலகம் ஒரே பல்லவி பாடும். சேமித்து வைப்பர்! சிக்கனம் பிடிப்பர்! இவை செல்வர்கள் கணிப்பு.

குமணன் கடையெழு வள்ளல்களில் ஒருவன்! அவர்களோடு கொடுப்பார் எண்ணிக்கை நின்று விட்டது என்பதைத் தானே கடை என்ற அடைமொழி குறித்து நிற்கிறது. பாடு பெறு பரிசிலன் வாடினன் பெயர்தல் என் நாடு இழந்த அதனினும் நனி இன்னாது... என்று கருதிய பண்பாளன் அவன். புறப்பாடல் தொகுதிகளுக்கெல்லாம் அழகூட்டும் ஒரு கவிதை பெருஞ்சித்திரனாரிடமிருந்து பிறந்தது.



www.saivamonline.com

அது அவர் அவனைப் பாடியது அன்று. அவர்- அவளைப் பாடியது, ஆம் தன் மனைவியை முன்னிறுத்திப் பாடிய ஈர வரிகளின் ஈட்டம் அது. குமணனைப் பாடிப் பெருஞ் செல்வத்துடன் திரும்பும் புலவர் பிரான், அவற்றை, யார்யாருக்கு எப்படி எப்படி எல்லாம் வழங்கி வாழலாம் என்று கட்டளை இடவில்லை! உரிமைச் சாசனம் படைக்கிறார். கணவன் மனைவி அன்பெல்லாம் கூட முடிசூட்டிக் கொண்டு ஆட்சி செய்வது வறுமையில்தான் என்பது புரிகிறது. ஈட்டியவன், தானே செலவு செய்ய வேண்டும் என்றே விரும்புவான். பெண்மைக்கு, அறிஞர்களிடம் என்றும் முதல் மரியாதை உண்டு என்பதைக் கவிதை வரலாறாக்குகிறது.

குமணன் நமக்கு வழங்கிய பெருஞ்செல்வத்தை எல்லாம், மனைக்கு உரிமை பூண்டவளே! கொடு! கொடு! கொடுத்துக் கொண்டே இரு! யார் யார் என்று அவள் புருவம் வளைத்தாள்! விடை கவிதையாக மடை திறக்கிறது. பெண்ணே! நின்னை விரும்புவர்க்கெல்லாம் கொடு! நின்னால் விரும்பப் படுபவர்களுக்கும் கொடு. எவ்வளவு நுட்பம்! நம்மை விரும்புவோரை நாம் விரும்புவதில்லை! வறுமையிலும் பண்பில் தலைப் பிரியாது, பெருமித வாழ்க்கை வாழ்ந்து வரும் நம் சுற்றத்தாருக்கெல்லாம் கொடு.

பட்டினியில் நாம் வாடிய போதெல்லாம் தம் வறுமை கூறாது வழங்கிப் பகிர்ந்து உண்ட அன்புடையார்க்கு எல்லாம் கொடு! இவர்களுக்கு மட்டுமல்ல பெண்ணே! இன்னார் இனியார் என்று கருதாது வருவார் எவராயினும் அவர்களுக்கெல்லாம் கொடு! என்னைக் கேட்டுக் கொண்டுதான் கொடுப்பது என்று தாமதப்படுத்தாதே! கொடு! கொடுத்துக் கொண்டே இரு! இறைக்கிற கிணறுகள் மட்டுமே ஊறும்! குமணன் தந்த செல்வத்தைப் போற்றிப் பாதுகாத்து வைத்துக் கொண்டால், பின்னாளில் நன்றாக வாழலாம் என்று வைத்திழக்கும் வன்கணாளர் வரிசையில் நில்லாது பெற்றதை வழங்கு! மேலும் ஒரு அழகிய தொடர்- நீயும் எல்லோர்க்கும் கொடு மதி...

மேற்குறித்தவாறு ஒரு பக்கம் நீ கொடு! இன்னொரு பக்கம் நானும் கொடுக்கிறேன். ஒன்பது வரியில், ஒரு பண்பாட்டு ஓவியம் திரையிட்டுக் கொள்கிறது. ஒல்லும் வகையான் அறவினை என்பது செல்வர்களுக்கு மட்டுமல்ல; சிறிது பெற்றவர்களுக்கும் தாம் என்பது புரிகிறது. சங்கக் கவிதைகள் தமிழால் மட்டும் அழகு பெறுவன அல்ல; அவற்றினூடே இழையோடும் இத்தகு ஈர வரிகளில் தான் அவற்றின் உயிர் நிலை மறைந்து கிடக்கிறது.

புறநானூறு - 163



www.saivamonline.com

## பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகல்

காதல் பெரிதும் இனிமையானது: காதலிக்கும் காலமே வாழ்வின் வசந்தகாலம். காதலித்துக் கொண்டே இருப்பது எல்லார்க்கும் விருப்பமானது. ஆனால் கல்யாணம்? "ஒரு ஆணும் - ஒரு பெண்ணும் பெறப்போகும் துன்பத்தின் தொடக்கம்" என்கிறார் கவியரசர். வள்ளுவரோ அதனை "மங்கலம்" என்கிறார். அது துன்பமா? இன்பமா என்பதெல்லாம் அவரவர் அனுபவத்தைப் பொருத்தது.

கலித்தொகைத் தலைவன் ஒருவன் காதல் வயப்பட்டான். சந்திப்புக்கள் தொடர்ந்தன. இயற்கைப் புணர்ச்சி- இடந்தலைப்பாடென்று புணர்ச்சி நீடித்தன. காதலுக்கு மேலெல்லை "இரண்டே திங்கள்" என்கிறது இலக்கணம். காதலில் கண்ட இன்பமா? வேறு காரணமா? தெரியவில்லை. தலைவன் திருமணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டே செல்கிறான். தலைவி சாம்புகிறாள்! தோழி அறிவொடு தலைவனைச் சந்திக்கப் புறப்படுகிறாள்.

---

***இன்றைய மேலைநாட்டு வாழ்வியல் போக்கு, முன்னரே தமிழ்நாட்டில் சோதனைக்கு ஆட்படுத்தப்பட்டு விட்டது. ஆணும், பெண்ணும் கண்டு காதலித்து-கூடி வாழ ஒரு காலத்தில் தமிழ்ச்சமுதாயம் பச்சைக் கொடி காட்டியது. அது சங்க காலம்! அதனால் தான் நம் இளைஞர்கள் அதனைப் பொற்காலம் என்கின்றனர்.***

---

தமிழர் காதல் இலக்கியச் சித்திரிப்புகளில், நாடகக் கூறுகளே மிகுதி. அது இல்லது! இனியது! நல்லது என்று புலவர் உலகம் வரித்துக் கொண்ட ஓர் உத்தி என்கிறார் நக்கீரர். இன்றைய மேலைநாட்டு வாழ்வியல் போக்கு, முன்னரே தமிழ்நாட்டில் சோதனைக்கு ஆட்படுத்தப்பட்டு விட்டது. ஆணும், பெண்ணும் கண்டு காதலித்து-கூடி வாழ ஒரு காலத்தில் தமிழ்ச்சமுதாயம் பச்சைக் கொடி காட்டியது. அது சங்க காலம்! அதனால் தான் நம் இளைஞர்கள் அதனைப் பொற்காலம் என்கின்றனர்.

ஆணிடம் பொய்மை தலைகாட்ட, பெண் காதல் பாட்டையில் வழுவ முயல, சமூகம் விழித்துக் கொண்டது. இந்த நிலை நல்லதல்ல என்று உணர்ந்த சமூகப் பெரியவர்கள், ஊர் அறியத் திருமணத்தை நடத்தி வைத்தனர். பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர்



www.saivamonline.com

கரணம் என்கிறார் தொல்காப்பியர். காதலித்தவர்கள் எல்லாம் நேர்மை நெறியில் நின்றிருந்தால் ஏன் காதலை எதிர்க்கச் சமூகம் முனைந்திருக்கும்? சங்க நூல்களில், "தோழி" ஓர் அற்புதப் பாத்திரம்! தலைவிக்கும் மேலான முதன்மை இடம் அவளுக்குத்தான்.

தலைவன் அறிஞன் ஆயிற்றே! பண்பாளன் என்றல்லவா நினைத்திருந்தேன். திருமணத்தை இவன் நீட்டிக்க என்ன காரணம்? தலைவிக்காகத் தோழி சிந்திக்கிறாள். அவனை நேரே சந்திக்கிறாள். உலகியலும்- அறநெறியும் முன்வைக்கிறாள். நெய்தல்கலி, நல்லந்துவனாரின் அறக்கொடை. இரங்கல், நிலை பெற வேண்டிய நெய்தல் தடத்தில், அறத்தை ஆணிவேராக இறக்குகிறார்.

***காதலித்தவர்கள் எல்லாம் நேர்மை நெறியில் நின்றிருந்தால் ஏன் காதலை எதிர்க்கச் சமூகம் முனைந்திருக்கும்?***

***உலகம் எல்லாம் அறிந்து போற்றி வாழ வேண்டிய ஒன்பது நீதிகளைத் தோழி வாயிலாக நல்லந்துவனார் வரிசைப்படுத்துகிறார். அத்தனையும் வைர வரிகள்: அறங்களின் அணிவகுப்பு. சிற்றின்பம் பேசும் இலக்கியங்கள் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தும் வாழ்ந்திருப்பது, இத்தகைய இழையோடும் அறஉயிர்ப்புக்களால் தான் என்பது புரிகிறது.***

ஆணும் பெண்ணும் கூடி வாழும் வாழ்வே அறம் தான் என்கிறான் வள்ளுவப்பாட்டன். உலகம் எல்லாம் அறிந்து போற்றி வாழ வேண்டிய ஒன்பது நீதிகளைத் தோழி வாயிலாக நல்லந்துவனார் வரிசைப்படுத்துகிறார். அத்தனையும் வைர வரிகள்: அறங்களின் அணிவகுப்பு. சிற்றின்பம் பேசும் இலக்கியங்கள் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தும் வாழ்ந்திருப்பது, இத்தகைய இழையோடும் அறஉயிர்ப்புக்களால்தான் என்பது புரிகிறது. தலைவனே! நெய்தலங்கானல் துறைவனே! எம் தலைமகளின் காதல் இறைவனே! அறிவாயா? "இல்லறம் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை"

பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்! அன்பு என்பது சுற்றம் தழீஇ வாழ்தல். அறிவு என்பது அறியாதார் சொல் பொறுத்தல். செறிவு என்பது கூறினதொன்றை மாறாதிருத்தல். நிறை என்பது பிறர் அறியாது செயலாற்றுதல். முறை என்பது கண்ணோட்டம் இல்லாது தண்டித்தல். பொறை என்பது பகைவரைக் காலம் வரும் வரை



www.saivamonline.com

பொறுத்திருத்தல். காதல் இலக்கியத்தில் இது என்ன அறக்கடை வியாபாரம்? நீங்கள் முகம் சுளிக்கலாம். ஒன்பதில் இரண்டு தலைவனைத் தெருட்டுவதற்கு; ஏனைய நமக்கு அறிவு கொளுத்த! புணர்ந்தாரைப் பிரியாது போற்றி வாழ, விரைந்து மணம் கொள்ள வேண்டாவா? செறிவு என்பது, பிரியேன்-பிரியினும் தரியேன் என்று அன்று கூறினாயே, அதனை மறவாது போற்றுதல் அல்லவா? வல்விரைந்து மணம் பேசு!

களைத்து வருபவனை வரவேற்கிறோம்! அவன் களைப்புத்தீர. ஒரு வெள்ளிக் குவளையில் சூடான பசும்பால் வழங்குகின்றோம். பால் குடித்தவன் பாத்திரத்தைக் களவாடலாமோ? நினக்கு இன்பம் தந்து துயர் தீர்த்தவள் இவள். இவள் நலன் அழிய, மணம் கொள்ளாது காலம் நீட்டிப்பது அறனாகுமோ! குதிரைகளைப் பூட்டி, நின்தேரைக் கிளப்பு! விரைந்து வந்து அவளை மணம் பூண்டு மகிழ்வித்தல் அறநெறி வழுவா உனக்குக் கடன் அல்லவா! இத்தகு வைரவரிகளின் பளபளப்பில் தான். சங்கப் பாடல்கள் இன்னும் ஒளிவீசிக் கொண்டுள்ளன. இவை தாய்ப்பால் போல: அது மட்டுமே உணவும் ஆகும்! நோய் தீர்க்கும் மருந்து ஆகும்!

கலித்தொகை-நெய்தற்கலி-16

## அறங்கள் தளிர்க்கும் அந்த நாள் வருமா?

நம் தாய்த்தமிழ் செம்மொழி என்ற பெருமிதத்தை எட்டிப் பிடிக்க இருப்பதாகச் சொல்கிறார்கள். மகிழ்ச்சிதான் : ஆனால், இம் மொழி பேசும் இனம் மேன்மையான ஒரு இடத்தை எட்டிப் பிடித்து விடும் என்று நீங்கள் நம்புகிறீர்கள்? எனக்கில்லை. மொழி வெறும் ஒரு கருவி! இனத்தின் பண்புகளை அது தாங்கிச் சுமக்கிறது. மொழி வழி கூட ஒன்றுபடாது. சேரன், சோழன், பாண்டியன் என்று இனவழிப் பிரிந்து, நாம் இட்ட சண்டைகள் தாமே இங்கே வரலாறுகள். நாம் போற்றி வைத்த ஏற்றத் தாழ்வும், புனைந்து கொண்ட வெற்றுக் கற்பனைகளும் மொழியில் அடிமைச் சாசனங்களாக நிற்பது நம்மில் பலருக்கும் தெரியாதே!

---

*மொழி வழி கூட ஒன்றுபடாது. சேரன், சோழன், பாண்டியன் என்று இனவழிப் பிரிந்து, நாம் இட்ட சண்டைகள் தாமே இங்கே வரலாறுகள். நாம் போற்றி வைத்த ஏற்றத் தாழ்வும், புனைந்து கொண்ட வெற்றுக் கற்பனைகளும் மொழியில் அடிமைச் சாசனங்களாக நிற்பது நம்மில் பலருக்கும் தெரியாதே!*

---



www.saivamonline.com

தமிழில் எதிரில் இருப்பவனை எப்படிச் சுட்டுவீர்கள்! சிலரை, நீ என்பீர்கள் : சிலரை நீர் என்பீர்கள், உங்கள் எண்ணத்தில் சற்று உயர்ந்தோரை நீவிர் என்பீர்கள். காசு தருபவனை நீங்கள் என்பீர்கள். எஜமானனைத் தாங்கள் என்பீர்கள். ஆட்சியாளனைத் தேவரீர் என்பீர்கள்! இரண்டு மனித உறவுகளுக்கு இடையே எத்தனை பேதங்கள். நாம் சமூகத்தில் விளைத்த பேதங்கள்- மொழியின் சாபங்களாகப் பதிவாகி நிற்கின்றன. இவை மொழியின் குற்றங்களா? இல்லையே! தொல்காப்பியம்-தமிழரின் நனி நாகரிகப் பதிவுகளின் களஞ்சியம் என்கிறார்களே! நிஜம்தானா? மூன்று சொற்களுக்கு விளக்கம் தருகிறார் தொல்காப்பியர். ஈ என்பது ஒன்று; தா என்பது ஒன்று; கொடு என்பது ஒன்று; உங்களுக்கு வேறுபாடு தெரிகிறதா? இருக்கிறது என்கிறது தொல்காப்பியம்.

***நாம் சமூகத்தில் விளைத்த பேதங்கள்- மொழியின் சாபங்களாகப் பதிவாகி நிற்கின்றன.***

***இழிந்தவன் ஒருவன், உயர்ந்தவனிடம் ஒன்று கேட்கும் போது ஈ என்ற சொல்லே பயன்படுத்தப்பட வேண்டும். தன்னை ஒத்தானிடம் தா என்று கேட்கலாமாம்! உயர்ந்தவன்- தன்னினும் தாழ்ந்தவனிடம் ஒன்றைப் பெற முயலும் போது கொடு என்றே கேட்டாக வேண்டும். போலிமரபுகள்! ஆண்டான் அடிமைச் சமுதாயம் இங்கே கணவன் மனைவியை நீ என்று சுட்டலாம். மனைவி கணவனை அப்படி அழைக்க உத்தரவாதம் வந்தாகி விட்டதா? நீங்கள் திருந்தத் தயாரில்லை! மொழி செப்பம் பெற்று விடுமா?***

இழிந்தவன் ஒருவன், உயர்ந்தவனிடம் ஒன்று கேட்கும் போது ஈ என்ற சொல்லே பயன்படுத்தப்பட வேண்டும். தன்னை ஒத்தானிடம் தா என்று கேட்கலாமாம்! உயர்ந்தவன்- தன்னினும் தாழ்ந்தவனிடம் ஒன்றைப் பெற முயலும் போது கொடு என்றே கேட்டாக வேண்டும். போலிமரபுகள்! ஆண்டான் அடிமைச் சமுதாயம் இங்கே கணவன் மனைவியை நீ என்று சுட்டலாம். மனைவி கணவனை அப்படி அழைக்க உத்தரவாதம் வந்தாகி விட்டதா? நீங்கள் திருந்தத் தயாரில்லை! மொழி செப்பம் பெற்று விடுமா? சமூகத்தை மாற்றி அமைக்க முயலாமல்,மொழிக்கு முடி சூட்ட நினைப்பதில் நியாயம் உள்ளதா? யோசித்துப் பாருங்கள்! எல்லாம் உணர்ச்சி உச்சியில் பூக்கின்றன!



www.saivamonline.com

அறிவில் எப்போது மலர்ச்சி வரப் போகிறது!

ஒரு புறப்பாடல் இந்தச் சிந்தனைகளில் என்னைத் தள்ளிவிட்டது! நான் வியந்து இரசித்த ஒரு பாடல். ஒரு தமிழனை, எதனை நீ உயர்ந்தது என்று கருதுகிறாய்? கேட்டுப்பாருங்கள்! ஏதேதோ சொல்லுவான்! இங்கே, தான் போட்ட குப்பையைத் தான் கூட்டினால் இழிவு என்கிறான்! குப்பை போட்ட உனக்குக் கூட்டும் கடமை எப்படி இழிவாகப் பட்டது? பாரதி சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் என்கிறான்! மலம் அள்ளுவது; வண்டி இழுப்பது; எச்சில் இலை எடுப்பது... பட்டியல் நீண்டு கொண்டே போகும்! கழைதின்யானையார் என்ற புறநானூற்றுப் புலவர் ஒருவர் "ஒருவனிடம் சென்று இரத்தலே இழிவு" என்கிறார்.

***நமக்கு இச்சகம் பேசுவதும், இளித்துக் கொண்டு யாசிப்பதும் கை நீட்டிக் காசு கேட்பதும் அவமானமாகப் படுவதில்லை. இங்கே உழைத்து வாழ்வாரை விட, சார்ந்து வாழ்வாரே அதிகம்.***

"ஈயென இரத்தல் இழிந்தன்று". நமக்கு இச்சகம் பேசுவதும், இளித்துக் கொண்டு யாசிப்பதும் கை நீட்டிக் காசு கேட்பதும் அவமானமாகப் படுவதில்லை. இங்கே உழைத்து வாழ்வாரை விட, சார்ந்து வாழ்வாரே அதிகம். இரத்தல் தான் இழிவு. உழைக்க முயலாது, இரந்து வாழ நினைத்த நினைவுகள் இங்கே கவிதைகளாக நிற்கின்றனவே!

கவிஞன் உயர்ந்தவன் ஆயிற்றே! மேலும் வினவுகிறோம். இரத்தலைவிட இழிவானது வேறு உண்டா? இரப்பவன் இரந்த போது, பொருளை வைத்துக் கொண்டே இல்லை என்கிறானே அது இரத்தலினும் இழிந்தது! மனம் ஒரு சபாஷ் போட விரும்புகிறது. "அதன் எதிர் ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று". நம் நாட்டில் வறுமை என்பது இல்லாமையால் வந்தது அன்று. பொருள் ஒரே இடத்தில் குவிந்ததால் வந்தது. அடுத்த சிந்தனைக்குச் செல்கிறோம்? எது உயர்ந்தது? அழகான-அர்த்தமுள்ள பதில் வருகிறது.

இல்லாதவன் முகம் பார்த்தால் இந்தா வைத்துக் கொள் என்று, தானே வழங்குவது தான் உயர்ந்தது. "கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று" சரியான விடை என்று நெஞ்சம் விம்மிதம் உறுகிறது! இதனினும் உயர்ந்தது இருக்க முடியாது என்று திடமாக நம்பத் தொடங்குகின்றோம். "இட்டார் பெரியார்; இடாதார் இழிகுலத்தோர்" என்ற தொடரின் அருமையை நினைக்கிறோம்.



www.saivamonline.com

*அற்புத சிந்தனைகள் தாம்! தமிழர்களுக்கு அறநெறிகளை, ரசிக்கத் தெரிந்த அளவுக்கு, பின்பற்றத் தெரியும் நாள் ஒன்று வந்தாக வேண்டும். சுனாமிக்கு உதவ முன் வந்த அமெரிக்காவிடம் அன்பு போதும், உதவி வேண்டாம் என்று சொன்ன முதல் பெருமிதத்தில் புறநானூறு தளிர்க்கும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.*

கொடுத்தலினும் உயர்ந்த வேறு ஒன்று உண்டா? மெல்ல வினவுகிறோம். உச்சி முடியைப் பிடித்து இழுக்கும்போது வருமே ஒரு சிலிர்ப்பு, விடை நம்மை குலுங்க வைக்கிறது. கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று. "வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை" எனத் திருவள்ளுவர் உடன் வருகிறார். அற்புத சிந்தனைகள் தாம்! தமிழர்களுக்கு அறநெறிகளை ,ரசிக்கத் தெரிந்த அளவுக்கு, பின்பற்றத் தெரியும் நாள் ஒன்று வந்தாக வேண்டும். சுனாமிக்கு உதவ முன் வந்த அமெரிக்காவிடம் அன்பு போதும், உதவி வேண்டாம் என்று சொன்ன முதல் பெருமிதத்தில் புறநானூறு தளிர்க்கும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

- புறநானூறு - 204

## செம்புலப் பெயல் நீர் போல...

தக்க தருணங்களில் வெளிப்படும் பொருள் பொதிந்த தொடர்கள் சாகா வரம் பெற்று விடுவதுண்டு! "பீடன்று", இது கண்ணகி வாய் வெளிப்போந்தது. இராமன் உரைத்த, "இன்று போய் நாளை வா" மறக்க முடியாதது. "ஒன்றே குலம்; ஒருவனே தேவன்" திருமூலர் நிற்கிறார். பாரதியின் ஆவேசத்திற்குத் "தனி ஒருவனுக்கு உணவில்லை எனின் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்". சங்க நூல்களிலும் அரிய தொடரால், அதுவே அவர் பெயராய் நிலைத்த சான்றோர் பலர் உளர். ஒருவர் "செம்புலப் பெயல் நீரார்".

*தமிழர்கள்-உறவுக்குள் திருமணம் செய்யும் பழக்கம் மிக்கவர்கள் என்ற ஒரு குற்றச்சாட்டு உண்டு. காதல் திருமணங்களினால் இந்தப் பழி துடைக்கப்படுவதுண்டு.*

தமிழர்கள்-உறவுக்குள் திருமணம் செய்யும் பழக்கம் மிக்கவர்கள் என்ற ஒரு குற்றச்சாட்டு உண்டு. காதல் திருமணங்களினால் இந்தப் பழி துடைக்கப்படுவதுண்டு. குறுந்தொகைத் தலைவன் ஒருவனும், தலைமகள்



www.saivamonline.com

ஒருத்தியும், ஊழ் வழித் தனியிடத்தில் சந்தித்து அன்பு பூண்டு-காதலித்துக் கூடுகின்றனர். பிரியும் நேரம் வருகிறது; தலைமகள் கண்களில் கண்ணீர் அரும்ப, போர்முனையில் பகைவரும் அஞ்சும் உரம் பெற்ற தலைமகனோ, உள்ளம் நைகிறான்.

அன்னார் இருவரும் உறவினர்களா? தந்தைக்கும்-தந்தைக்கும் அறிமுகம் ஏதும் உண்டா? தாய்வழியிலாவது உறவு முறை உள்ளதா? இவர்களாவது இதற்கு முன் ஒருவரை ஒருவர் சந்தித்தவர்களா? எதுவும் இல்லை. அன்பு மீதூர்ந்தது எப்படி? பிரியமாட்டா மனம் எவ்வாறு உருக்கொண்டது? காதல் ஒரு கானல் நீர்; அருகருகே கூடிப் பழகும் வாய்ப்புக்களால்.- உடல் கவர்ச்சியில் முளைப்பது என்பார் கூற்றைத் தகர்க்கிறது குறுந்தொகை. ஓர் இளைஞன் சமூக வீதியில் எத்தனை பெண்களைச் சந்திக்கிறான்! ஏதோ ஒரு பெண்ணிடம் தானே காதல் முகிழ்க்கிறது. ஒன்றே-வேறே என்று இருபால்வயின்-ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின், ஒத்த கிழவனும், கிழத்தியும் காண்ப என்கிறது தொல்காப்பியம்.

ஆம்! விதிதான் கூட்டி வைக்கிறது! "என் தலைவிதி, உங்களிடம் வந்து மாட்டிக் கொண்டேன்" என்ற குரலை எப்போதாவது நாமும் கேட்டிருப்பது நிழலாடுகிறது. "இயற்கைப் புணர்ச்சிப் புணர்ந்த பின்னர், பிரிவர் எனக் கருதி அஞ்சித் தலைமகள் குறிப்பு வேறுபாடு கண்டு தலைமகன் கூறியது" என்கிறது பாடலை விளக்க வந்த கொளு. "யாயும் ஞாயும் ஆர் ஆகியரோ? எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்? யானும் நீயும் எவ்வழி அறிதும்?" என வினாக்களை அடுக்கிய தலைவன், இருவர் நெஞ்சக் கலப்பைச் "செம்புலப் பெயல்நீர் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" என நிறைவித்து, நெஞ்சமும் கலந்த கலப்பிற்கு ஓர் உவமையாகச் "செம்புலப் பெயல்நீர் போல" என்ற தொடரை முன்னிறுத்துகிறான். தஞ்சைத் தரணியில் காணப்படுகிறதே சிவப்பு- நீர் பொழிந்தால், மண்ணின் நிறம் பெற்று-இரத்த ஆறு போல ஓடுமே அந்தத் தண்ணீர் போல் என்று இதற்குப் பொருள் கொண்டனர் சிலர்.

எனக்கென்னவோ இந்தப் பொருள் பொருத்தமாகப் படவில்லை! ஒரு குறள் உங்களுக்கு நினைவுக்கு வரவேண்டும். அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல என்று தொடங்குவது. பொறுத்தாற்றும் பண்புக்கு வள்ளுவர் ஏன் நிலத்தை உவமைப்படுத்தினார்? உடைப்பாரை மலை தாங்காதா? வெட்டுவாரை



www.saivamonline.com

மரம் தாங்காதா? தாங்குமே! இகழ்ந்துரைப்பாரைப் பொறுத்தாற்றுவது தலையாய பண்பு என்கிறது குறள்.

"பொறுத்தார் பூமி ஆள்வார்" என்கிறதே பழமொழி. மலைக்கும்-மரத்திற்கும் இல்லாத சிறப்பு மண்ணுக்கு உண்டு. தன் மீது நின்று கொண்டே, தன்னை வெட்டுபவன் என்ற உவமையால், தன்னால் வாழ்வு பெற்றவனே தன்னை இகழ்பவன் என்பது நுட்பம். பொறுப்பதால் வருகிறது புகழ் மட்டுமா? தன்னை ஒருவன் காயப்படுத்தி, அகழ்ந்து, புரட்டிப் போடப் போட, நிலம், விதை முளைக்க இயலாது, கட்டுப்பட்டு, வறள் நிலமாகக் கிடந்த தன்மை நீங்கி-மெலினப் பட்டு நன்னிலமாகத் தன்னை மாற்றிக் கொண்டு விடுகிதே. அதை நினைக்க வேண்டும்.

இகழ்வார் சொல் பொறுத்தல், புகழ் மட்டுமன்று. செவி கைப்பச் சொல் பொறுக்கும் பண்பையும் தந்துவிடுகிறதே! தருமபுத்திரனும் காந்தியடிகளும் நிழலாடுகின்றனர். அன்னை தெரசா தெரிகிறார். செம்புலம் என்பது செம்மண் பூமியன்று; செம்மையான-விளைவுக்கு ஏற்ற நன்னிலம்-நஞ்சை நிலம். கறள்நிலம்-மலை நிலம் நீரை உள்ளே வாங்கிக் கலந்து கொள்ளாது. நன்னிலமாக இருந்தாலும் நீர் இன்றி அமையாது. நீரும் தனித்திருந்து வானில் பயன்தராது!

---

*செம்புலம் என்பது செம்மண் பூமியன்று; செம்மையான-விளைவுக்கு ஏற்ற நன்னிலம்-நஞ்சை நிலம். கறள்நிலம்-மலை நிலம் நீரை உள்ளே வாங்கிக் கலந்து கொள்ளாது. நன்னிலமாக இருந்தாலும் நீர் இன்றி அமையாது. நீரும் தனித்திருந்து வானில் பயன்தராது!*

---

செம்புலத்தில் பெயல்நீர் பொழிந்தால், இரண்டும் விரைந்து கலக்கும். அவற்றின் பயன்மிகும். நிறைவெய்தும். கட்டு விடாத ஆண் மனம், பெண்மை அன்பின் ஈரக்கசிவில் கலந்த கலப்பின் சிறப்பே கவிதையானது! வள்ளுவர் அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்றதும், அன்புடைமைக்கு முன்னாக. இல்வாழ்க்கை-வாழ்க்கைத் துணைநலம்-மக்கட்பேறு என அதிகாரங்கள் அமைத்த நுட்பமும் புலனாகின்றன.

## நொதுமலாளர் பொது மொழி கொள்ளாது

ஜெய் ஜவான்! ஜெய் கிசான்! என்று பிரகடனத்தை-போர் மேகம் சூழ்ந்த நேரத்தில் அமரர் இலால்பகதூர் சாஸ்திரி முன் வைத்தார்.



www.saivamonline.com

போர்முனை வெற்றி எல்லாம் ஏர்முனையின் வெற்றியைச் சார்ந்தே அமையும்! இந்தியாவின் உயிர் நாடி கிராமங்களில் தாம் இருக்கின்றன என்றாரே காந்தி அடிகள்! காதில் போட்டுக் கொண்டோமா? முதல்தரக் குடிமக்களாக மதிக்கப்பட வேண்டியவர்கள் உழவர்கள்! இங்கே அவர்களுக்கு நாலாமிடம்! சுழன்றும் ஏர் பின்னது உலகம்-என்றாரே வள்ளுவர்.சிலை எடுக்கக் கற்றோமே தவிரச் சிந்தித்ததுண்டா?

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் ஆட்சிக்காலம் அது! அரசுக்கு உழவர்கள் செலுத்த வேண்டிய செய்க்கடன் (பயிர்க்கடன்) நிலுவையிலிருந்தது. அதிகாரிகள், அரசன் பெயரால் நெருக்கடி தந்தனர்! உழவர்கள், கூடாமையால் அல்ல, செலுத்த இயலாமையால் தவித்தனர். நாடாண்ட மன்னனுக்கு உழவர் நிலை எடுத்துச் சொல்ல யாரும் முன் வரவில்லை! வெள்ளைக்குடி நாகனார் அறிந்தார்! அரசவை சேர்ந்தார். வேந்தே! உனக்கு ஒன்று கூறுவேன்! என் சொல் கேள்! சங்கத் தமிழில் சொல்லட்டுமா? நினவ கூறுவல்! எனவ கேண்மதி! நேரடியாகச் செய்திக்கு வரவில்லை வெள்ளைக்குடியார்.

***கொடியும், குடையும், செங்கோலும் அறநெறி ஆட்சியின் புறஅடையாளங்கள் என்பது ஆட்சியாளர்களுக்குப் புரிதல் வேண்டும். இங்கே அவை, அலங்காரங்களாகவே நின்று போயின!***

மக்கள் நீதி வேண்டி வரும்போது, நீ காட்சிக்கு எளியனாக இரு! அது வேண்டிய நேரத்தில் பெய்த மழை போல் மகிழ்ச்சி தரும். முறைவேண்டு பொழுதில் பதன் எளியோர் ஈண்டு உறைவேண்டும் பொழுதில் பெயல் பெற்றோரே! மன்னா! நீ அரியணையில் அமர்ந்திருக்கும் போது உன் தலைமேல் ஒரு குடை விரிக்கப்படுகிறதே! நிழல் தருவதற்கா? நின் நிழல் வாழும் குடிமக்கள் மேல் வரும் துன்ப வெய்யிலை, நீ குடையாக நின்று மறைப்பாய் என்பதற்கல்லவா? கண்பொர விளங்குநின் விண்பொருவியன்குடை வெயின்மறைக் கொண்டன்றோ அன்றே! வருந்திய குடிமறைப்பதுவே கூர்வேல் வளவ!

கொடியும், குடையும், செங்கோலும் அறநெறி ஆட்சியின் புறஅடையாளங்கள் என்பது ஆட்சியாளர்களுக்குப் புரிதல் வேண்டும். இங்கே அவை, அலங்காரங்களாகவே நின்று போயின! பாண்டிய நெடுஞ்செழியன் செல்லுயிர் கொடுத்துச் செங்கோலாச்சினான் என்கிறார் இளங்கோவடிகள்! வளவ! நீ போர் முனையில் பெறும் வெற்றிகள்

எல்லாம் ஏர்முனை தந்த வளத்தால் வருவது! பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே அரசாட்சி என்பது எளிதன்று மன்னா! அது நெருப்பு ஆற்றின் மேல் மயிர்ப்பாலம் கட்டி நடப்பது போன்றது! அருமந்த அரசாட்சி அரிதோ மற்று எளிதோ தான்? என்று சேக்கிழார் மனுநீதிச் சோழன் வரலாற்றில் வினாத் தொடுக்கிறார்.

மழை பெய்யவில்லையா! இந்தக் கொடுங்கோலன் ஆட்சியில் மழை எப்படிப் பெய்யும்? மக்கள் குமுறுவர்! விளைவு இல்லாது போயிற்றா? உலகம் மன்னன் மேல் தான் பழி போடும்! சுனாமி போல், வாராத துன்பம் ஒன்று வந்து சேர்ந்தாலும் ஆட்சியாளர் தலையே உருளும்! "மாரி பொய்ப்பினும், வாரி குன்றினும், இயற்கை அல்ல செயற்கையில் தோன்றினும், காவலர் பழிக்கும் இக்கண்ணகன் ஞாலம்" எவ்வளவு அருமையான அறிவுரைகள். அன்று அறிஞர்களிடம் காணப்பட்ட அந்தத் துணிச்சல் எங்கே போயிற்று!

---

*காமுகர்கள், துறவுப்போர்வையில் சாமியார்களாக வலம் வருகிறார்கள்! பக்தி உலகம் மண்டியிட்டு ஏமாறுகிறது! பசுத்தோல் போர்த்திய புலிகளாக ஆட்சியாளர்கள் ஜனநாயகப் போர்வைக்குள் சர்வாதிகாரம் செய்கிறார்கள்.*

*அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் கொண்ட அறிஞர் உலகம், நெட்டை மரங்களாக நின்று புலம்புவதைத் தவிர வேறொன்றையும் இயற்ற இயலாத பேடிமையில் நிற்கிறது. மனத்தினும் பெரிதாக வயிற்றை நினைப்பவர்களுக்கு எங்கிருந்து துணிவு வரும்? அறிஞர்கள் இடத்தை அடியாட்கள் நிரப்பி விட்டனர்!*

---

சங்கப் புலவர்கள் வறுமையில் வாடினார்கள்! ஆனால், ஆட்சியாளர்களிடம் அடி பணிந்தவர்கள் அல்லர்! காமுகர்கள், துறவுப்போர்வையில் சாமியார்களாக வலம் வருகிறார்கள்! பக்தி உலகம் மண்டியிட்டு ஏமாறுகிறது! பசுத்தோல் போர்த்திய புலிகளாக ஆட்சியாளர்கள் ஜனநாயகப் போர்வைக்குள் சர்வாதிகாரம் செய்கிறார்கள் தனக்குப் பின் - தன் மகன் - தன் குடும்பம் என்ற விருப்பம் மேலெழுந்துவிட, நாட்டில் ஜனநாயகம் மரணப் படுக்கையில் கிடப்பதாகவே உணரப்பட வேண்டிய



www.saivamonline.com

வெள்ளைக்குடி நாகனாரைப்போல், ஆட்சியாளர்களை அணுகி, அறிவுரை கூறும் துணிவை அறிஞர் உலகம் இழந்து விட்ட அவலத்தை என்னென்பது? அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் கொண்ட அறிஞர் உலகம், நெட்டை மரங்களாக நின்று புலம்புவதைத் தவிர வேறொன்றையும் இயற்ற இயலாத பேடிமையில் நிற்கிறது. மனத்தினும் பெரிதாக வயிற்றை நினைப்பவர்களுக்கு எங்கிருந்து துணிவு வரும்? அறிஞர்கள் இடத்தை அடியாட்கள் நிரப்பி விட்டனர்!

---

*அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் கொண்ட அறிஞர் உலகம், நெட்டை மரங்களாக நின்று புலப்புவதைத் தவிர வேறொன்றையும் இயற்ற இயலாத பேடிமையில் நிற்கிறது. மனத்தினும் பெரிதாக வயிற்றை நினைப்பவர்களுக்கு எங்கிருந்து துணிவு வரும்? அறிஞர்கள் இடத்தை அடியாட்கள் நிரப்பி விட்டனர்!*

---

வெள்ளைக்குடி நாகனார் தொடர்கிறார்! வளவ! கேள்! பகைவன்-நன்றுரைத்தால்-தீமை இருக்கும் என்று தவிர்த்து விடலாம். நண்பன்-தீதுவளர்த்தால்-அன்பினை வைத்து அடையாளம் கண்டு கொள்ளலாம். பகைவரா-நண்பரா என்று இனங்காண மாட்டாத ஒரு கூட்டம் இருக்கிறது. அதற்கு நொதுமல் என்று பெயர். தெரியாததைத் தெரிந்ததாகப் பேசுவார்கள்! தெரியாததைத் தெரியும் என்று சாதிப்பார்கள்! விளைவு ஒன்றும் நோக்காது, வாய்க்குவந்தது பேசுமே ஒரு கூட்டம்! அதுதான் நொதுமல். அவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள்; பொதுவாய்ச் சொல்லும் பொன்னம் பலங்கள் அவர்கள்.

கிள்ளி வளவனே! இத்தகு நொதுமலாளர் பேசும் உள்ளீடற்ற பொது மொழிகளுக்கு நீ செவி சாய்க்காதே! அவர்கள் ஆபத்தானவர்கள்! அத்தகையோர் பிடியில் மன்னன் சிக்கியிருந்திருக்கக் கூடாது. எனவே, உழவர்களின் துயர் துடை! அன்னார் செலுத்த வேண்டிய வரியை இரத்து செய்! அவர்கள் குடும்பத்துக்குப் பாதுகாவல் வழங்கு! பகைவர் உன் காலில் வீழ்ந்து வணங்குவர்!

மன்னன் கேட்டு நடந்தான்! உழவர் துயர் அகன்றது. அறிஞர் உலகம் பெருமிதத்தில் நின்றது! அந்த நாள் திரும்ப வருமா? அறிஞர் உலகம் அச்சம் தீருமா? எல்லாம் ஓர் ஆசை தான்! காத்திருந்து பார்க்கலாம்.

புறநானூறு - 35



www.saivamonline.com

## பன்முட்டின்றால் தோழி நம் களவே!

தங்கள் வாழ்க்கையிலேயே மிக மகிழ்ச்சி நிறைந்த நாட்கள் எவை? அவளும் நானும் காதலித்திருந்த நாட்கள் தாம்? துயரமான நாட்கள்? அவள் நோயுற்று மரணப்படுக்கையில் கிடந்த காலத்தில் அருகிருந்து மீட்க முடியாது பார்த்திருந்த நாட்கள்! சொன்னவன் ஒரு மேற்கு நாட்டு ஆங்கிலக் கவிஞன்! மேலை நாடு என்றால் பாரதிக்குக் கோபம் வரும். அந்த மேற்கு மொழிகள் புவி மிசை ஓங்கும் என்றான் அவன். காதலினால் சாகாமல் இருத்தல் கூடும், கவலைபோம், ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே என்று காதலுக்கு அவன் பச்சைக் கொடி காட்டினான்.

*மேலை நாடு என்றால் பாரதிக்குக் கோபம் வரும். அந்த மேற்கு மொழிகள் புவி மிசை ஓங்கும் என்றான் அவன்.*

காதலும் கவலையும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் என்கிறாள் ஓர் அகநானூற்றுத் தலைவி. அவனும் அவளும் காதலித்தனர். அன்பு செய்தனர். உற்றாரை ஊரை மறைத்துக் காதல் தொடர்ந்தது. பகல் சந்திப்புக்கள் போதாது என்றான் அவன். இரவென்றால் என் இல்லத்தருகே வந்து விடு; எப்பாடு பட்டாவதும் வந்து சேர்கிறேன் என்று உறுதி தந்தாள் தலைவி! அந்த இரவும் வந்தது; அவனும் வந்தான். திட்டமிட்டவாறு தன் வருகையை அவளுக்கு அடையாளப்படுத்தி அறிவிக்கவும் செய்தான். தலைவி முயன்று பார்த்தாள்! ஆயிரம் தடைகள்! அன்றைய இரவு துன்பமாய்க் கழிந்தது.

வேறு ஒரு நாள் முன்னிரவு. தலைவன் வந்து தலைமகள் வீட்டருகே மறைந்து நிற்பது தெரிந்து விட்ட நிலையில், தலைவி தோழியோடு உரையாடத் தொடங்குகிறாள்! அவன் வந்தது தெரியாதது போன்ற ஒரு பாசாங்கு! அன்னான் செவியேற்ற வேண்டும் என்பது நோக்கு! உரையாடல் தொடர்கிறது. தோழி, கடந்த வாரம் குறித்த ஒரு நாளில் இரவில் தலைவனைச் சந்திக்க நான் எடுத்த முயற்சிகள் யாவும் தோற்றன! என்ன தடை? எப்படி? நாம் வாழும் ஊரும் ஓர் ஊரா? மோசமானது இந்த ஊர்? எதனால் சொல்கிறாய்? ஆண்டு முழுவதும் திருவிழாக் கொண்டாட்டம்! கூத்து! நள்ளிரவு வரை இந்த ஊர் அடங்கித் தொலைப்பதில்லை! விழா இல்லாத நாட்களில் என்ன தடை? என்ன வேலையோ? என்ன அவசரமோ? இந்த ஊர் இரவில் தூங்கித் தொலைப்பதில்லை! கள்ளைக் குடித்து விட்டுக் களித்துச் சின்ன சின்ன



www.saivamonline.com

பிள்ளைகள் கூட இரவு முழுவதும் தெருவில் கும்மாளமிடுகின்றனர்!

நள்ளிரவுக்குப் பின் முயன்றிருக்கலாமே! தோழி! முயன்றேனே! முடியவில்லை! ஏன்? தோழி கேட்கிறாள். நமது தாய், அவள் ஏன் இரவெல்லாம் விழித்து நம்மைக் காவல் செய்கிறாள்? காதலுக்கு எதிரி வீட்டில் அன்னைமார்கள் தாமே! என்ன சத்தம்! கதவு திறந்து கொண்டு இரவில் எங்கே போகிறாய்? தாயின் உறுமல் சத்தம். முத்தொள்ளாயிரத்தில் ஒரு தலைவி கேட்டாள்! அன்னை இளையளாய் மூத்திலள் கொல்லோ? நம் தாய், நம்மைப் போல் இளமைப்பருவத்தில் இருந்து பின் தானே மூத்தவளானாள்? ஏன் இளமகள் மனம் அவளுக்குப் புரியவில்லை?

*“இரும்பிழி மகாஅர் இவ் வழுங்கல் மூதூர்*
*விழவின் றாயினும் துஞ்சா தாகும்*
*மல்லல் ஆவணம் மறுகுடன் மடியின்*
*வல்லுரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள்”*

ஒரு கையால் நம்மை அணைத்தவாறே தூங்கும் தாய் தூங்கி விட்டது அறிந்து, மெல்ல வாயில் திறந்து வெளியே வந்தால், பாரா உஷார் போட்டுக் கொண்டு ஊர்க்காவலர்கள் உலா வந்து தொலைக்கின்றனர்!

***அன்னை இளையளாய் மூத்திலள் கொல்லோ? நம் தாய், நம்மைப் போல் இளமைப்பருவத்தில் இருந்து பின் தானே மூத்தவளானாள்? ஏன் இளமகள் மனம் அவளுக்குப் புரியவில்லை?***

பின் என்ன தான் நடந்தது? தோழி ஆர்வம் மீதுர வினவுகிறாள்! இர்வு மணி இரண்டைக் கடந்தது; காவலர்களும் தூங்கப் போய் விட்டனர். நல்ல நேரம் என்று தெருவில் ஓர் அடி எடுத்து வைத்தேன்! அவ்வளவு தான்! ஊரே தன் காவலில் தான் வாழ்கிறது என்று நினைத்துக் கொண்டிருக்கும் தெருநாய்கள், ஒன்று திரண்டு குரலெடுத்துக் குரைத்துத் தீர்த்தன.

சிறிது நேரத்தில் அவை எங்கோ தொலைந்து மறைந்தன. மறைவிடத்திலிருந்து, தலைவன் குறித்த இடம் நோக்கி இரண்டடி எடுத்து வைத்திருப்பேன்! குலை நடுங்கிப் போனேன்! பதைப்போடு, ஏன்? என்றாள் தோழி. அதுவரை மேக மூட்டத்தில் மறைந்திருந்த அந்தப் பாழாய்ப்போன நிலவு, அப்போது தான் ஒளியை உமிழ்ந்து என்னை உலகுக்குக் காட்ட முயன்றது. நீ தேய்ந்து ஒழி என்று சாபமிட்டு இருளில்


www.saivamonline.com

தங்கி, அது மறைந்ததும் இரண்டடி எடுத்து வைத்தால், நம் இல்லத்து எலி திருடும் கோட்டான்கள் பொந்திலிருந்து புறப்பட்டு என் நெஞ்சு நடுங்குமாறு கூவிப் பறந்தன.

இனி இது முடியாது என்று இல்லம் சேர்ந்தேன்! தோழி கேட்டாள்! வேறு ஒரு நாளில் முயன்றிருக்கலாமே? முயன்றேனே! தலைவனைச் சந்தித்து மகிழ்ந்தாயா? தலைவி கண்களில் கண்ணீர்! அமெரிக்காவில் நூற்றி ஓராவது மாடியில் வசித்த சகோதரிகள் மூவர் மின்சாரம் இல்லாததால் மாடிப்படி ஏறினராம்! களைப்புத் தோன்ற, ஆளுக்கொரு கதை சொல்லிக் கொண்டு ஏறுவோம் என்றனர். மூத்தவள் காதல் கதை சொன்னாள். அடுத்தவள் நகைச் சுவை கதை சொன்னாள். இன்னும் இரண்டே மாடி பாக்கி இருக்கையில் மூன்றாமவள் தான் சோகக்கதை சொல்கிறேன் என்றாள். சொல் என்றதும் வீட்டுச் சாவியை மறந்து காரிலேயே விட்டு விட்டேன் என்றாளாம்.

இடையூறுகள் யாதும் இல்லாத நாளில் நான் மெல்லத் தலைவன் குறித்த இடத்திற்குச் சென்றேன்! கண்டு மகிழ்ந்தாயா? கூடிக்களித்தாயா? எல்லாம் மடிந்த காலை ஒருநாள் நில்லா நெஞ்சத்து அவர் வாரலரே. ஆம்! அன்றைக்குத் தலைவன் அங்கே இல்லை!

தலைவன் நெஞ்சம் கசிகிறான்! கசிய வைப்பது தானே தலைவி நோக்கம்! களவு பல இடப்பாடுகள் கொண்டது. விரைவில் முறையாக மணந்து கொண்டு கற்பு நெறிக்கு வா என்ற அழைப்பை நனி நாகரிகப்படுத்துகிறது அகநானூறு!

சோழ மன்னர்களுள் ஒருவன் தித்தன். அவன் தலைநகர் உறந்தை. அந்நகர் பகைவர் நெருங்க முடியாத பல காவல்களைக் கொண்டிருந்தது. உறந்தையை நெருங்க முயலும் பகைவர்களுக்கு உள்ள தடைகள் போல நமது களவும் தோழி! பார்த்தாயா! எவ்வளவு முட்டுப்பாடுகளை உடையது!

நொச்சிவேலி தித்தன் உறந்தைக்
கன்முதிர் புறங் காடன்ன
பன்முட் டின்றால் தோழி நம் களவே

[illegible]

அகநானூறு - 122



www.saivamonline.com

## அறநெறி முதற்றே அரசின் கொற்றம்

சங்க காலத்துப் புலவர்கள் மேல் எனக்கு நியாயமான கோபம் உண்டு. தமிழ் வேந்தர்களை மொழி வழி ஒன்றுபடுத்த முயலாது இனவழி வேறுபடுத்துவதில் அவர்கள் முனைந்திருந்தனர். புறநாற்று வீரமெல்லாம் கொள்ளிடத்தின் தென்கரையில் வாழ்ந்த தமிழனும் வடகரையில் வாழ்ந்த தமிழனும் முட்டி மோதிச் செத்தொழிந்த அவலங்கள் தாமே!

பகை கடந்து வாழக் கற்பிக்காமல், மோதி மடியத் தமிழ் பயன்பட்டது ஓர் அவலமல்லவா? விதி விலக்காகச் சிலர் அத்திப் பூவாகத் தென்படுகின்றனர். அறிவாளிகள், அதிகார வர்க்கத்தைத் தட்டிக் கேட்கும் பலம் இல்லாத சமூகத்தில், கீழ்மை முடிசூடிக் கொள்வதைத் தடுக்க இயலாது.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனின் அன்புக்கு உரியவர் மதுரை மருதன் இளநாகனார். மன்னனை அடுத்து வாழ்ந்தவர் அல்லர் அவர். இடித்து உரைக்கும் ஏற்றம் மிக்கவர்.

***பகை கடந்து வாழக் கற்பிக்காமல், மோதி மடியத் தமிழ் பயன்பட்டது ஓர் அவலமல்லவா? விதி விலக்காகச் சிலர் அத்திப் பூவாகத் தென்படுகின்றனர். அறிவாளிகள், அதிகார வர்க்கத்தைத் தட்டிக் கேட்கும் பலம் இல்லாத சமூகத்தில், கீழ்மை முடிசூடிக் கொள்வதைத் தடுக்க இயலாது.***

நன்மாறா! சிவனின் நெற்றிக்கண்போல, நீ மூவேந்தர்களிலும் மேம்பட்டவனாகத் திகழ்கிறாய்! சிவன் திரிபுரங்களைக்கூட தன் புன்முறுவலால்தான் அழித்தான். மன்மதனை அழிக்கத்தான் நெற்றிக்கண் தேவைப்பட்டது. புறப்பகையிலும் பெரியதும் - வெல்லமாட்டாததும் - பலரையும் வீழ்த்தியதும் அகப்பகையாகிய காமமே என்பது உவமையில் நிற்கும் தொனி.

மன்னா! ஓர் அரசன் வெற்றி எதனைச் சார்ந்தது என்று கருதுகிறாய்? நாற்பெரும் படைகளின் வலிமையைச் சார்ந்தது என்று நினையாதே! அரச வெற்றி என்பது அறநெறிமேல் மட்டுமே கனிவது. இரத-கஜ-துரக-பதாதி என்று நாற்பெரும் படைகளைக் குறிப்பார்களே வடமொழி வாணர்கள்!

தமிழில் அவற்றை இப்படிச் சொல்லுங்கள் என்கிறார் இளநாகனார்.



www.saivamonline.com

*கடுஞ்சினத்த கொல்களிறும், கதழ்பரிய கலிமாவும்*
*நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய*
*புகன்மறவருமென*
*நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட*
*அறநெறி முதற்றே அரசின் கொற்றம்* - புறம்.55

துரியோதனின் தோல்வியும், இராவணன் வீழ்ச்சியும் படைபலம் இல்லாமலா தோன்றின? அங்கே அறம் என்ற உயிர்ப்பு இல்லை என்பதே குறை! அறநெறி செலுத்துவது எவ்வாறு? அரசனுக்கு எவை அறங்கள்?

"ஈதல் அறம்" என்பது பொதுவான மதிப்பீடு! "மனத்துக் கண் ம்ாசிலன் ஆதல் அனைத்தறன்" என்கிறார் வள்ளுவர். பொறாமை, ஆசை, கொடும்கோபம், இன்னாச் சொல் என்பனவற்றை நீக்கி விட்டு ஒருவன் வேறு எதனைச் செய்தாலும் அதனை அறன் என ஏற்பேன் என்கிறார் குறள்காரர். "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்பது அவரின் வேறு ஒரு பதிவு.

***தனி மனித அறங்களில் விதிவிலக்குத் தாராது உறுதிபட நிற்கும் வள்ளுவர், அரசியல் அறம் பெறும் போது விலக்களிக்க முன்வருகிறார். முன்னது நீர் நிலையின் கரை: பின்னது நீர்! நீர் அசையலாம்! கரை அசைந்தால் நாடு என்னாகும்?*** "ஒன்றாக நல்லது கொல்லாமை" "கொலையில் கொடியாரை வேந்து ஒறுத்தல்" ***ஒன்று, அறத்துப்பால்; மற்றது அரசியல் பால்.***

சங்க நூல்களில், "எனப்பட்டதே" என்றால், என்று சிறப்பித்து உரைக்கப்பட்டது என்பதே பொருள். தனி மனித அறங்களில் விதிவிலக்குத் தாராது உறுதிபட நிற்கும் வள்ளுவர், அரசியல் அறம் பெறும் போது விலக்களிக்க முன்வருகிறார். முன்னது நீர் நிலையின் கரை: பின்னது நீர்! நீர் அசையலாம்! கரை அசைந்தால் நாடு என்னாகும்? "ஒன்றாக நல்லது கொல்லாமை" "கொலையில் கொடியாரை வேந்து ஒறுத்தல்" ஒன்று, அறத்துப்பால்; மற்றது அரசியல் பால். நன்மாறா! அறநெறியை மூலதனமாகக் கொண்டே அரசன் வெற்றி வாய்க்கும் என்பதைப் புரிந்து கொண்டால் இரண்டு தவறுகள் நடத்தல் நிகழாது! நிகழவும் கூடாது.

ஒன்று! இவர் நம்மவர் என்று விட்டுக் கொடுத்துச் செங்கோலை வளையச் செய்யும் பிழை. மற்றொன்று வேண்டாதவரை - அவர்



www.saivamonline.com

நற்பண்புகளைக் கணக்கில் கொள்ளாது தண்டிப்பதால் வரும் குற்றம்.

*"அதனால், நமர் எனக் கோல் கோடாது*
*பிறர் எனக் குணம் கொல்லாது*
*ஞாயிற் றன்ன வெந்திறல் ஆண்மையும்*
*திங்கள் அன்ன தண்பெருஞ் சாயலும்*
*வானத் தன்ன வண்மையும் மூன்றும்*
*உடையை யாகி... நீ.. நீடு வாழிய!"* - புறம்.55

அறவுரை, அறத்தின் வேர்களாக மன்னன் நெஞ்சில் ஊடுருவுகின்றன. முதல் வரியில் மனுநீதிச் சோழன் நிழலாடுகிறான்! இரண்டாம் வரியில் : தோல்வி கண்ட இராவணன் முதலிய பலர் நெஞ்சில் வந்து போகின்றனர்.

அரச வெற்றிக்குப் பகை தெறுவதில் ஞாயிறு போன்ற வெந்திறல் ஆண்மை வேண்டும். ஞாயிற்றுக்கு இரண்டு ஆற்றல்கள்: ஒன்று ஒளி; மற்றது வெப்பம். ஒளி விரும்பப்படும். வெப்பம் வெறுக்கப்படும். நின் நிழல் வாழ்நர்க்கு ஒளியாவாய். பகைக்கு நீ வெம்மை செய்வாய் என்பன குறிப்புக்கள்.

தண்ணளி செய்வதில் நீ நிலவாக இரு; கொடுப்பதில், கைமாறு வேண்டா வான் மேகமாக வாழ்ந்திடு! இவற்றுள் ஒன்று குறைந்தாலும் நின் வெற்றி அமையாது என்பார். மூன்றும் உடையையாகி என்று முற்றும்மை கொடுத்துப் பேசினார்.

நன்மாறன் காலத்தில் பஃறுளி ஆறும் இல்லை. பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் இல்லை. வைகை மணலை உவமை சொல்ல ஏதோ அவருக்குத் தோன்றவில்லை. முருகன் நெடுவேள் எனப்படுவான். அவன் நின்று அருள் செய்யும் திருத்தலம் செந்தூர். கடல் பரப்பிலிருந்து புறப்படும் பேய்க்காற்று, கரையில் பரந்துகிடக்கும் மணல்களை மலைபோல் திரட்டிக் குவித்து வைக்கும்.

இன்று கூட அவற்றைக் காணலாம். இளநாகனார், அங்கே குவிந்து கிடக்கும் மணலை ஒவ்வொன்றாக எண்ணச் சொல்; என்ன வருமோ, அந்த எண்ணிக்கைக்கும் மேலான நாள்கள், நெடுந்தகை! நீ நீடு வாழ்க என்று வாழ்த்தி நிறைகிறார்.

*இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்*
*கெடுப்பார் இலானும் கெடும்*

அறிஞர்கள் கொஞ்சம் வாய்திறந்தால், அது நாட்டுக்கு நல்லது. எப்போது திறக்கப்போகிறார்கள்?

புறம் - 53



www.saivamonline.com